REGISTERED AS NEWSPAPER


# உதயன்

பக்கங்கள் - 16 விலை - 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 173 வைகாசி 7 ஆம் நாள் புதன்கிழமை 20 மே 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## 1000 + கொரோனா

* 1,023 பேர் அடையாளம்
* 581 பேர் கடற்படையினர்
* நேற்று மட்டும் 31 பேர்



கொழும்பு, மே 20
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியோரின் எண்ணிக்கை நேற்று ஆயிரத்தைக் கடந்தது. நேற்றுமட்டும் 31 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள 13 ▶

# படைகளை நெருக்கினால் பதிலடி கொடுப்போம்

## சர்வதேச அமைப்புக்களுக்கு ஜனாதிபதி கோத்தாபய எச்சரிக்கை

கொழும்பு, மே 20
எந்தவொரு சர்வதேச அமைப்பும் தொடர்ந்து நம் நாட்டையும் நமது இராணுவத்தினரையும் குறிவைத்து ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்க இடமளிக்கப்போவதில்லை. அது தொடர்ந்தால் அத்தகைய அமைப்புகளிலிருந்தோ அல்லது ஸ்தாபனங்களிலிருந்தோ இலங்கையை விலக்கிக்கொள்ள ஒருபோதும் பின்னிற்கப் போவதில்லை.
இவ்வாறு சர்வதேசத்துக்கு எச்சரிக்கை விடுப்பது போன்று தெரிவித்தார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ. 02 ▶





## 'மாஸ்க்'கை மறந்த கோத்தா!

கொழும்பு, மே 20
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ முகக்கவசம் (மாஸ்க்) அணியாது நேற்றைய தேசிய படைவீரர்கள் நினைவு நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார். 02 ▶

## கழுத்தறுப்பு அதிகாரிக்கு கோத்தாபய பதவி உயர்வு

கொழும்பு, மே 20
பிரிட்டனுக்கான இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரியாகப் பணியாற்றியவேளை அங்குள்ள தமிழர்களுக்குக் கொலை மிரட்டல் சமிக்ஞை விடுத்த பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ, மேஜர் ஜெனரல் தர அதிகாரியாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி கோத்தாபய ராஜ 02 ▶




## ஒன்றரை இலட்சம் தமிழரை கொன்றமை வெற்றி விழாவா?

### ராஜபக் ஷ அரசிடம் பழ.நெடுமாறன் கேள்வி

கொழும்பு, மே 20
"முள்ளிவாய்க்கால் மண்ணில் ஒன்றரை இலட்சம் தமிழ் மக்களைக் கதறக் கதற – துடிக்கத் துடிக்க சாகடித்துவிட்டு இன்று வெட்கம் இல்லாமல் மனச்சாட்சி இல்லாமல் மனிதாபிமானம் இல்லாமல் போர் வெற்றி விழாவைக் கொண்டாடுகின்றது ராஜபக் ஷ அரசு. ஓர் இனத்தை 02 ▶

## மழையால் 3 பேர் சாவு

கொழும்பு, மே 20
மலையகம் மற்றும் தென்பகுதியில் தொடரும் மழை காரணமாக பல்வேறு பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மண்சரிவு காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மடுலைப் பகுதியில் பெண் ஒருவரும், அலுகல பிரதேசத்தில் குழந்தையொன்றும் உயிரிழந்துள்ளனர். நேற்றிரவும் ஒருவர் வெள்ள இடரால் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இரத்தினபுரி மாவட்டமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த மாவட்டத்தில் தொடர்ந்தும் வெள்ளப்பெருக்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
நாட்டில் நீரேந்துப் பகுதிகளிலும் தென்மாகாணத்திலும் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் கங்கைகளை அண்டிய பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற ஆர 02 ▶



## 66 குடும்பங்கள் யாழில் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 20
யாழ்ப்பாண மாவட்டத்தில் காற்றின் தாக்கம் காரணமாக 02 ▶

## மீசாலை கோவிலில் திருட்டு

கொடிகாமம், மே 20
தென்மராட்சி மீசாலையில் கோவில் உடைக்கப்பட்டு 13 ▶

## நாட்டைவிட்டு நகர்கிறது 'அம்பான்'

கொழும்பு, மே 20
வங்காள விரிகுடாவில் திருகோணமலையிலிருந்து 1070 கிலோமீற்றர் தூரத்தில் நிலைக்கொண்டிருக்கும் அதிசக்தி வாய்ந்த 'அம்பான்' சூறாவளி இன்று புதன்கிழமை வடகிழக்கு திசையினூடாக நாட்டைவிட்டு அப்பால் நகர்ந்துசெல்லும் என்று வானிலை அவ 13 ▶

## மருத்துவபீடத்தில் சோதனை தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 20
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் முன்னெடுக்கப்பட்ட கொரோனா தொற்றைக் கண்டறியும் பரிசோதனைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. நாளைய தினம் பெரும்பாலும் மீள ஆரம்பிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.
கொரோனாத் தொற்றைக் கண்டறியும் சோதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டு வந்தது. ஒரு மாதத்தின் பின்னர் யாழ்ப் 02 ▶

## வாய்க்குள் விரல் விட்டு போதைப்பொருள் மீட்பு

### கடிபட்டது பொலிஸின் விரல்

யாழ்ப்பாணம், மே 20
பொலிஸார் கைது செய்ய முற்பட்டபோது தன்னிடமிருந்த ஹெரோய்ன் போதைப் பொருள் பைக்கற்றுக்களை விழுங்கியுள்ளார் சந்தேகநபர். எனினும், சந்தேகநபரின் வாய்க்குள் விரலைவிட்டு ஒரு பைக்கற்றை மீட்டதாக வல்வெட்டித்து 13 ▶

## படைகளை...

பத்தரமுல்ல நாடாளுமன்ற கட்டடத்தொகுதிக்கு அருகிலுள்ள படைவீரர்கள் நினைவுத் தூபி வளாகத்தில் தேசிய படைவீரர்கள் நினைவு தின நிகழ்வு நேற்று மாலை நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகின் பலம் வாய்ந்த நாடுகளின் தலைவர்கள்கூட தெளிவாக தமது நாட்டின் படைவீரர்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையையும் எடுப்பதற்கு அனுமதிக்கப்போவதில்லை என தெரிவித்திருக்கின்ற சூழ்நிலையில், எம்மைப் போன்ற ஒரு சிறிய நாட்டில் இத்தகைய அர்ப்பணிப்புகளைச் செய்துள்ள இராணுவத்தினர் தேவையற்ற அழுத்தங்களுக்கு உள்ளாக நான் ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லை.

30 வருடங்களாக இந்த நாட்டுக்குச் சாபமாக இருந்து வந்த பிரிவினைவாத பயங்கரவாதத்தை 11 வருடங்களுக்கு முன்னர் 2009 மே மாதம் 19ஆம் திகதி முழுமையாகத் தோற்கடித்தோம்.

முப்படைகளினதும் தலைவர் என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ அதற்கு தலைமைத்துவத்தை வழங்கினார். பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் மூலம் மக்களுக்கு பயம், சந்தேகமின்றி வாழ்வதற்கும், தங்களது மனித உரிமைகளை சுதந்திரமாக அனுபவிப்பதற்கும் முடியுமான சூழல் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது.

சுமார் 30 வருடங்களுக்கு பின்னர் சுதந்திரமானதும் சுயாதீனமாதுமான தேர்தலொன்றை நடத்துவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்தி, ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டது. இந்த நாட்டில் எந்தவொருவருக்கும் தடையின்றி, நாட்டின் எந்தவொரு இடத்திலும் சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழல் மீண்டும் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது. அச்சமும் பயமும் சூழ்ந்திருந்த எமது நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக எமது இராணுவத்தினரும் அவர்களின் குடும்பங்களும் பெரும் அர்ப்பணிப்பையும் தியாகங்களையும் செய்துள்ளனர்.

போர் என்பது மலர்தூவிய பஞ்சணையன்று. குறிப்பாக சட்டத்தை மதிக்காத உலகின் மிகக் கொடூரமான பயங்கரவாத இயக்கத்துடன் போராடும்போது படைவீரர்கள் பல்வேறு துன்பகரமான அனுபவங்களுக்கும் கஷ்டங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருக்கும்.

அந்த 30 வருட காலப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் மட்டுமன்றி நாட்டின் அனைத்து இடங்களிலும் அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர். தற்கொலைக் குண்டுதாரிகள், பஸ் வண்டிகளிலும் புகையிரதங்களிலும் வைக்கப்பட்ட குண்டுகள், கட்டடங்கள் மீதான குண்டுத் தாக்குதல்கள் காரணமாக பெருமளவு உயிர் மற்றும் சொத்துக்களுக்கு சேதங்கள் ஏற்பட்டன. மனிதாபிமான நடவடிக்கையின் இறுதி நோக்கம் நாட்டில் நீண்டகால சமாதானத்தை ஏற்படுத்துவதாகும். பௌத்த சமயத்தால் வளம்பெற்ற எமது நாட்டில் அனைத்து சமயத்தினருக்கும் அனைத்து இனங்களுக்கும் புகலிடமான ஒரு நிர்வாக முறைமை உள்ளது. வரலாறு நெடுகிலும் இந்த நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், மலாயர், பறங்கியர் ஆகிய அனைத்து இனங்களும் சமமாக வாழும் உரிமையை பெற்றிருந்தனர்.

எம்மை பிரித்து வேறுபடுத்த வேண்டும் என்பதே தீவிரவாதிகளின் நோக்கம். அவர்களின் நோக்கம் நிறைவேறியிருந்தால் எமது வரலாறு மாறியிருக்கும். மக்கள் ஒருவரையொருவர் வெறுக்கும், எல்லைகளுக்காக தொடர்ந்து போராடும், போர்ப் பீதி மக்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறிய, மற்றுமொரு துரதிர்ஷ்டமான, பிளவுபட்ட நாடாக இலங்கை மாறியிருக்கும். அந்த அழிவிலிருந்து நாட்டை விடுவித்த கௌரவத்தை, நீண்ட காலமாக எமது நாட்டின் சமாதானத்துக்காகப் போரிட்ட அனைத்து துணிச்சல்மிக்க இராணுவத்தினருக்கும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

மூன்று தசாப்தங்களாக இந்த வெற்றிக்காக உயிர்த் தியாகம் செய்து போரிட்ட ஜெனரல் கொப்பேகடுவ, ஜெனரல் விஜய விமலரத்ன உள்ளிட்ட அனைத்து படைவீரர்களையும் நாம் இந்தச்சந்தர்ப்பத்தில் நினைவுகூர்கின்றோம்.

இராணுவத்தில் 20 வருடங்கள் செயற்றிட்டமான சேவையில் ஈடுபட்ட அதிகாரி என்ற வகையிலும் பின்னர் 10 வருடங்கள் பாதுகாப்பு செயலாளராகவும், ஒரு பிரஜை என்ற வகையிலும் எமது படைவீரர்கள் செய்த அர்ப்பணிப்புகளை நான் நன்கறிவேன். போரின் வலிகள் எனக்கு நன்றாகத் தெரியும். எனவே எமது படைவீரர்களின் கௌரவத்துக்கும் நற்பெயருக்கும் இழுக்கை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஒரு போதும் இடமளிக்க மாட்டேன். எனது அரசின் கீழ் எமது படைவீரர்களின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கு அனைத்து வகையான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று உங்களுக்கு உறுதியளிக்கின்றேன். அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது ஒரு தேசிய பொறுப்பு.

படைவீரர்கள் உயிர் தியாகங்கள் செய்து பாதுகாத்த இந்த நாட்டை அனைத்து பிரஜைகளும் சமாதானமாகவும் மகிழ்ச்சியாகவும் கண்ணியமாகவும் வாழக்கூடிய சுபீட்சமான தேசமாக மாற்றுவது அவர்களுக்கு செய்யும் உயர்ந்த கௌரவமாகும். இதற்காக உங்களின் முழுமையான பங்களிப்பை வழங்க முன்வாருங்கள் என்று அனைத்து தேசப்பற்றுள்ள பிரஜைகளிடமும் கேட்டுக்கொள்கின்றேன். என்று தெரிவித்தார்.

அண்மைக்காலமாக ஐ.நா சபை இலங்கையைக் கடுமையாக விமர்சித்து வரும் நிலையிலேயே, இவ்வாறு சர்வதேச அமைப்புகளில் இருந்து விலகுவோம் என ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில், மல்வத்தை, அஸ்கிரிய பீடங்கள் உள்ளிட்ட மூன்று நிகாயக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி மகாசங்கத்தினர், கார்டினல், ஏனைய சமயத் தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, அமைச்சரவை அமைச்சர்கள், ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்பு செயலாளர், முப்படைகளின் தலைவர்கள், முன்னாள் கடற்படை மற்றும் விமானப் படை தளபதிகள், பதில் பொலிஸ் மா அதிபர், சிவில் பாதுகாப்பு படை பிரதானி உட்பட படைவீரர்கள், படைவீரர்களின் குடும்பத்தினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (த-22)

## மாஸ்க்கை..

வீதிகளில் பயணித்தாலோ அல்லது நிகழ்வுகளில் பயணித்தாலோ முகக்கவசம் அணிந்துகொள்ளவேண்டும் என்பது சுகாதாரத் துறையினரின் கண்டிப்பான உத்தரவு. அதையும் மீறி ஜனாதிபதி முகக்கவசமின்றி நிகழ்வில் பங்கேற்றிருந்தார். (த)

## கழுத்தறுப்பு....

பக் ஷ வழங்கிய உத்தரவுக்கிணங்க இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பிரியங்க பெர்னாண்டோ மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளதை இராணுவ ஊடகப் பிரிவு உறுதி செய்துள்ளது. அரசின் நேற்றைய போர் வெற்றி விழாவில் பிரியங்க பெர்னாண்டோ உட்பட ஐவர் மேஜர் ஜெனரல் தர அதிகாரிகளாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

2018ஆம் ஆண்டு பிரிட்டனுக்கான இலங்கைத் தூதரகத்தில் சுதந்திர தினக் கொண்டாட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழர்களை நோக்கி பிரியங்க பெர்னாண்டோ 'கழுத்தை அறுப்பேன்' என்கிற ரீதியில் கொலை அச்சுறுத்தல் சமிக்ஞை செய்திருந்தார். பிரிட்டனில் அவருக்கு எதிராக வழக்கு விசாரணைகள் இடம் பெற்றிருந்தன. தண்டமும் விதிக்க ப்பட்டிருந்தது. (த22)

## மருத்துவபீடத்தில்....

பாணம் போதனா மருத்துவமனையில் ஆரம்பமானது. இதன் பின்னர் இரு இடங்களிலும் சோதனை முன்னெ டுக்கப்பட்டது.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அதிகளவானோருக்கு கொரோனா தொற்றுக்கான சோதனை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் கடந்த 4 நாள்களாக பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கொரோனாத் தொற்றைக் கண்டறியும் சோதனை தற்காலிகமாக நிறுத்தப்ப ட்டுள்ளது. சோதனையை முன்னெடு ப்பதற்காக ரெஸ்டிங் கிட்ஸ் வருவதில் ஏற்பட்ட தாமத்தாலேயே நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ள பி.சி.ஆர். கருவியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் உள்ள கருவியும் வேறு வேறானவை. இதன் காரணமாக மருத்துவ பீடத்திலுள்ள கருவிக்குரிய ரெஸ்டிங் கிட்ஸ் இன்றைய தினம் எடுத்து வரப்படும் எனவும் நாளையிலிருந்து சோதனை ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ,5)

## ஒன்ரறை...

அழித்துவிட்டு இன்னொரு இனம் கொண்டாடுவதா வெற்றி விழா?"

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன்.

அதுமட்டுமன்றி தமிழ் மக்களைக் கொன்றழித்த அரச படையினருக்கும் ராஜபக் ஷ அரசு பதவி உயர்வுகளை வழங்கி ஈழத்தில் எஞ்சியிருக்கும் தமிழர்களின் மனதையும் நோகடிக்கச் செய்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் மண்ணில் இலங்கை அரச படைகள் அரங்கேற்றியது திட்டமிட்ட தமிழின அழிப்புப் போரே. இதை எவரும் மறுக்கவோ அல்லது மறைக்கவோ முடியாது.

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்புக்கு சர்வதேச அரங்கில் நீதி கிடைக்கும் வரைக்கும் உலகத் தமிழர்களின் சாத்வீகப் போராட்டம் தொடரும்.

போர்க்குற்றவாளிகள் இப்போது பாதுகாப்பாக இருக்கலாம். ஆனால், அவர்களால் தொடர்ந்து அப்படி இருக்க முடியாது. அவர்கள் ஒரு நாளைக்கு தண்டனைகளை அனுபவித்தே தீர வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-22)

## மழையால்...

ம்பித்துள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொடை நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. கின் கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் அதன் கரையோரம் இருக்கும் மக்கள் வெளியேற ஆரம்பித்துள்ளனர். மலையகத்தில் தொடரும் காற்றுடன் கூடிய கடும் மழையுடனான காலநிலையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

கடந்த இரண்டு நாள்களாக பெய்துவரும் தொடர் மழையால் பல பகுதிகளில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதுடன் குடியிருப்புகள், ஆலயங்கள் நீரில் மூழ்கியுள்ளன. வீதிப் போக்குவரத்துக்களும் தடைப்பட்டுள்ளன. நாவலப்பிட்டி நகரமும் நீரில் மூழ்கியுள்ளது.

பொகவந்தலாவ, கொட்டியாகலை கீழ்ப்பிரிவு தோட்டத்திலும் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் லயன் குடியிருப்பொன்று பகுதியளவில் நீரில் மூழ்கியுள்ளது. லயன் குடியிருப்புக்கு அருகாமையில் உள்ள கால்வாய் ஒன்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் 14 வீடுகளைக் கொண்ட குடியிருப்புத் தொகுதியைச் சேர்ந்த 35 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களை தங்கவைப்பதற்கான நடவடிக்கையை தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் சாமிமலை ஒல்ட்டன் கீழ்ப்பிரிவிலும் அதிக மழையால் ஆற்றடி பிள்ளையார் ஆலயம் அதனைச் சூழ உள்ள குடியிருப்புகளும் நீரில் மூழ்கியுள்ளன.

மேலும் காசல்ரீ நீர்த்தேக்கத்துடன் இணையும் கெசல்கமுவ ஓயா பெருக்கெடுத்தமையால் பொகவந்தலாவ லெச்சுமி தோட்ட பிரதான பாதையில் போக்குவரத்து பாதிப்படைந்ததுடன் போடைஸ் ஆறு பெருக்கெடுத்தமையால் ஆற்றின் கரையோர குடியிருப்பாளர்கள் பாதிப்படைந்துள்ளனர். இதேவேளை, மஸ்கெலியா மவுசாகலை, காசல்ரி, நோட்டன் விமலசுரேந்திர, மேல்கொத்மலை நீர்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக உயர்வடைவதனால் கரையோர பகுதியிலுள்ளவர்கள் அவதானத்துடன் இருக்குமாறும் மின்சாரசபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, டீசைட் தோட்டத்தில் பெண் தொழிலாளியொருவர் மின்னல் தாக்கத்துக்குட்பட்ட நிலையில் மஸ்கெலியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஓ,5)

## 66 குடும்பங்கள்...

66 குடும்பங்களைச் சேர்ந்த 229 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவுப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அம்பான் சூறாவளியின் தாக்கம் நாட்டின் பல்வேறுபட்ட பகுதிகளிலும் உணரப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் காற்றின் வேகம் உயர்வாகவுள்ளது. கடந்த 17 மற்றும் 18 திகதி வீசிய காற்றின் தாக்கம் காரணமாக இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நெடுந்தீவு பகுதியைச் சேர்ந்த 14 குடும்பங்களைச் சேர்ந்த 54 அங்கத்தவர்களும், உடுவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 அங்கத்தவர்களும், நல்லூர் பிரதேச செயலகத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூன்று அங்கத்தவர்களும், பருத்தித்துறைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த பல குடும்பங்களுமாக 66 குடும்பங்களைச் சேர்ந்த 229 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். காற்றின் தாக்கத்தின் காரணமாக 47 வீடுகள் இதுவரை பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மேலும் ஓரிரு நாள்களுக்கு காற்றின் தாக்கம் கூடுதலாகக் காணப்படும். அதனால் கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுங்கள் என்ற வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. குறிப்பாக மீனவர் சமூகத்தினர் விழிப்பாகச்செயற்படுமாறும் இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

காற்றின் தாக்கம் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் இடர் முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் மாவட்ட இடர் முகாமைத்துவப் பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவித்துள்ளார். (க)

# அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல் செயன்முறையை முன்னெடுங்கள்

## இலங்கைக்கு அழுத்திச் சொல்கின்றது கனடா

கொழும்பு, மே 20

**இலங்கை அர்த்தபூர்வமான பொறுப்புக்கூறும் செயல்முறையைப் பின்பற்றவேண்டும் என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்து 11 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் தொடர்பாகவே தனது சிந்தனைகள் அமைந்துள்ளதாக அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். முள்ளிவாய்க்காலின் இறுதிக் கட்டப்போர் மற்றும் அதன் போது இழக்கப்பட்ட உயிர்கள் உட்பட போர் குறித்து சிந்திப்பதற்கான தருணம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த 11 வருடங்களில் போரால் பாதிக்கப்பட்ட பல கனேடிய மக்களை தான் சந்தித்துள்ளதாகவும் கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

மேலும், துன்பத்திலிருந்து மீள் எழும் தொடர்ச்சியான திறன் என்பன நிரந்தர சமாதானம் மற்றும் நல்லணிக்கத்தை ஊக்குவிக்கும் எனத் தெரிவித்துள்ள அவர், அர்த்தபூர்வமான பொறுப்புக்கூறல் செயல்முறையை பின்பற்றுமாறும் இலங்கைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்தோடு, நீதி மற்றும் நல்லிணக்கத்தை நோக்கி செயற்படுபவர்களுக்குக் கனடா அரசு எப்போதும் ஆதரவை வழங்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ.5)

# தகவல் வழங்கினால் கசிப்பை ஒழிக்கலாம்

## தென்மராட்சி மக்களிடம் வேண்டுகோள்

சாவகச்சேரி, மே20

சாவகச்சேரி வடக்கு பிரிவு மக்கள் வழங்கிய தகவல்களையடுத்து அங்கு சட்டவிரோத கசிப்பு உற்பத்தி முழுமையாக நிறுத்தப்பட்டது. இப் பகுதி விழிப்புக்குழு மற்றும் பொதுமக்கள் போன்று ஏனைய பிரிவு மக்களும் எமக்கு தகவல்கள் வழங்கினால் தென்மராட்சி பிரதேசத்தில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தியை முழுமையாக நிறுத்த முடியும். இவ்வாறு சாவகச்சேரிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கசிப்பு உற்பத்தியினை தடுப்பதற்காக புதிதாக நியமிக்கப்பட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

நாம் புதிதாக நியமிக்கப்பட்ட வேளையில் சாவகச்சேரி வடக்குப் பகுதியில் இயங்கும் விழிப்புக் குழுவினர் மற்றும் பொதுமக்கள் வழங்கிய தகவல்களையடுத்து அங்கு மேற்கொள்ளப்பட்டுவந்த கசிப்பு உற்பத்தி நிலையங்கள் எம்மால் சுற்றி வளைக்கப்பட்டு பெருமளவு கசிப்பும், கோடாக்களும், கைப்பற்ற முடிந்தது. இவ்வாறு பிரதேசத்தின் ஏனைய பகுதி மக்களும் தகவல்களை வழங்கினால் ஏனைய பகுதிகளிலும், கசிப்பை ஒழிக்க முடியும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ப9)

# பெற்றோல் விலையை அதிகரித்தமை தவறு!

## நுகர்வோர் உரிமைகள் இயக்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 20

இலங்கை இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் பெற்றோலின் விலையை அதிகரித்திருப்பது தவறு. இது குறித்து அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் (லங்கா ஐ.ஓ.சி) கடந்த 17 ஆம் திகதியிலிருந்து ஒரு லீற்றர் பெற்றோலின் விலையை 5 ரூபாவால் அதிகரித்துள்ளது.

அரசாங்கத்தால் பெற்றோலுக்கான வரி அதிகரிக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். உலக சந்தையில் எரிபொருள் விலை பெரும் வீழ்ச்சிகண்டிருக்கும் நிலையில், இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் பெற்றோல் விலையை அதிகரிப்பது ஆச்சரியமளிக்கிறது. இவ்வாறு விலையை அதிகரிப்பதால், பெற்றோலுக்கான கேள்வி குறைந்து, இலாபம் குறைவடையும். அவ்வாறிருக்கையில் பெற்றோல் விலையை அதிகரித்தமைக்கான காரணம் என்ன? இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் வெளிநாட்டுக் கப்பல்களுக்கு எரிபொருள் வழங்குவதன் ஊடாகப் பெருமளவு இலாபத்தை உழைக்குறது. எனவே அவர்களுக்கு உள்நாட்டு நுகர்வோரைப் பாதுகாக்க வேண்டிய அவசியமில்லை.

எனவே எரிபொருளை அத்தியாவசியப் பொருளாக அறிவிப்பதுடன், அதன் விலையை நிர்ணயிக்கும் பொறுப்பை நுகர்வோர் அதிகார சபையிடம் கையளிக்குமாறு வலியுறுத்தி நாம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருக்கிறோம்- என்றுள்ளது. (க)

# வெளிநாடு செல்வோருக்கான பதிவுகள் ஆரம்பம்

கொழும்பு, மே 20

வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக செல்லவுள்ள இலங்கையர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்படும் என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

ஆரம்ப கட்டமாக தென் கொரியா, ஜப்பான், கனடா மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளுக்கான தொழில் வாய்ப்புகளுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும். அதன் பிரகாரம் பணியகத்தின் பிரதான காரியாலயம், மாகாண மற்றும் மாவட்ட காரியாலயங்களில் பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். வெளிநாட்டு வேலைவாய்ப்பில் இருந்து, வந்திருப்பவர்கள் மீண்டும் தொழில் நிறுவனங்களுக்குச் செல்வதற்கு எதிர்பார்த்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொழிலுக்காக செல்பவர்களிடம் பணியகத்தால் சாதாரணமாக கோரப்படும் ஆவணங்களுக்கு மேலதிகமாக, தென் கொரியா, ஜப்பான், கனடா, ஜேர்மன் போன்ற நாடுகளின் தொழில் தருணர்கள், அவர்கள் அழைத்துக் கொள்ளும் இலங்கையர்கள் அந்த நாடுகளில் தனிமைப்படுத்தப்படுவது தொடர்பாக அனுப்பப்படும் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்.

அத்துடன் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளுக்கு செல்வதற்கான பதிவுகள் எதிர்வரும் நாள்களில் ஆரம்பிக்கப்படும் என்று பணியகம் தெரிவித்துள்ளது. (க)

# ஐ.ஓ.சி. அதிகரித்தாலும் நாம் அதிகரிக்கோம்

## அரசு திட்டவட்டம்

கொழும்பு, மே 20

இந்திய பெற்றோலிய நிறுவனமான ஐ.ஓ.சி பெற்றோல் விலையை 5 ரூபாவால் அதிகரித்தாலும், இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனம் எரிபொருள் விலையை அதிகரிக்காது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

சர்வதேச அளவில் எரிபொருள்களின் விலை குறைவடைந்துள்ள போதிலும் அரசு எரிபொருள் விலையை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக வெளியான தகவலையும் அந்த அமைச்சு நிராகரித்துள்ளது. ஐ.ஓ.சி. தனது சொந்த முடிவின் அடிப்படையிலேயே விலையதிகரிப்பைச் செய்துள்ளதாகவும் அதில் அரசின் தலையீடு எதுவுமில்லை எனவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஓ.5)

# நினைவேந்தல் நிகழ்வுக்கு வேட்பாளர்களை அழைத்ததால் உறுப்பினர்கள் வெளிநடப்பு

## வவுனியா தெற்கு சபையில் சம்பவம்

வவுனியா, மே 20

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை அமர்வின்போது இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரு வேட்பாளர்களை அழைத்தமையால் சபையில் குழப்பம் ஏற்பட்டு, சபையின் 12 உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்த சம்பவம் நேற்று இடம்பெற்றது. வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் மாதாந்த அமர்வுக்கு சபைத் தவிசாளர் து.நடராஜசிங்கம் மற்றும் செயலாளர் திருமதி சுகந்தி கிசோர் ஆகியோரால் சபை உறுப்பினர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அதன்படி காலை 10 மணிக்கு சபைக்குவருகைதந்த உறுப்பினர்கள் தமது வரவைப் பதிவு செய்துவிட்டு அமர்வை ஆரம்பித்தபோது முள்ளிவாய்க்கால் மண்ணில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவோம் என தவிசாளர் கூறியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அகவணக்கம் மற்றும் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்ற போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற வேட்பாளர்களும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களுமான ப.சத்தியலிங்கம் மற்றும் செந்தில்நாதன் மயூரன் ஆகியோர் சபையின் அஞ்சலி நிகழ்வுக்கு பிரசன்னமாகியிருந்தனர். ஒரு கட்சியின் வேட்பாளர்களை மட்டும் சபை அஞ்சலி நிகழ்வுக்கு எவ்வாறு அழைப்பீர்கள் என சபை உறுப்பினர்கள் சிலர் தவிசாளருடன் முரண்பட்டனர். இதனையடுத்து சபையில் இருந்து வெளியேறி குறித்த வேட்பாளர்களுடன் பிரதேச சபை வளாகத்தில் அஞ்சலி நிகழ்வை தவிசாளர் நடத்தியிருந்தார். தவிசாளர் தனது கட்சி சார்ந்த குறித்த இருவருக்கு மட்டும் அழைப்பு விடுத்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தவிசாளரின் தன்னிச்சையான போக்கைக் கண்டித்தும் 12 உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்ததாகவும், சபையை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை காரணமின்றி தவிசாளர் ஒத்திவைத்துள்ளதாகவும் வெளிநடப்பு செய்த உறுப்பினர்கள் தெரிவித்தனர். ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ், பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சுயேட்சைக்குழு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் 12 பேரே வெளிநடப்புச் செய்திருந்தனர். சபையில் அஞ்சலி நிகழ்வு நடத்த முற்பட்டவேளை குழப்பம் ஏற்பட்டது. இதனால் சபையின் வெளியில் சென்று இந்த அஞ்சலி நிகழ்வைச் செய்தேன்.

சிலர் என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு சபையில் அஞ்சலி செய்கிறீர்களா எனக் கேட்டனர். ஆம் எனத் தெரிவித்தேன். அதனால் அவர்கள் வந்தார்கள். நான் கட்சி பார்த்து செயற்படவில்லை. குழப்பம் காரணமாக சபை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று தவிசாளர் தெரிவித்தார். (ப-18)

# முப்படையைக் காட்டிக்கொடுத்த நல்லாட்சி அரசை மறந்துவிடோம்

## இப்படிக் கூறுகின்றார் மகிந்த

**கொழும்பு, மே 20**

**நல்லாட்சி அரசாங்கம் எமது முப்படையினரை சர்வதேசத் திடம் காட்டிக்கொடுத்தமை, முப்படையில் தற்போது பணியாற்றுகின்ற மற்றும் ஓய்வுபெற்ற அதிகளவான வீரர் களை வேட்டையாடி, அவமானத்துக்கு உட்படுத்தியமையை நாம் ஒருபோதும் மறந்துவிடமாட்டோம். அவ்வாறு பாதிக் கப்பட்ட அனைவருக்கும் நீதி நிலைநாட்டப்படும் என்பதை நாம் மீண்டும் உறுதியளிக்கிறோம் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



போர் வெற்றியின் பதினோராவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பிர தமர் செயலகத்தால் அனுப்பப்பட் டுள்ள செய்திக்குறிப்பிலேயே அவர் இந்த விடையத்தை தெரிவித்துள் ளார்.

அதில் மேலும் உள்ளதாவது:

நாம் மே மாதம் 19 ஆம் திகதி கொண் டாடுகிறோம். அது தமிழ் மக்க ளுக்கு எதிரானதொரு யுத்தம் அல்ல. மாறாக அமெரிக்காவின் எப்.பீ.ஐ. நிறுவனத்தால் உலகின் கொடூர மான தீவிரவாதிகள் எனப் பெயரி டப்பட்ட அமைப்பொன்றுக்கு எதி ரான யுத்தமாகும். புலிகள் அமைப் பின் தோல்வி காரணமாக தற் போது தமிழ் மக்களும் சுதந்திரமாக வாழ்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள் ளது. தமிழ்ச் சிறுவர்கள் புலிகள் அமைப்பால் இப்போது கடத்திச் செல்லப்படுவதில்லை. தமிழ் அரசி யல்வாதிகள் புலிக் கொலையாளி கள் தொடர்பான அச்சத்துடன் வாழ்வதில்லை. புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டமை மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் தேர்தல் களை நடத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளமையால் அந்தப் பிர தேசங்களைச் சேர்ந்த மக்களின் இறையாண்மை அதிகாரம் மீண் டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

புலிகள் அமைப்புக்கு எதிரான போரில் வெற்றிபெற்றமை மூலம் முழு உலகையும் வியப்பில் ஆழ்த் திய அந்த முப்படையினரும் பொலி ஸாரும் தற்போது கொவிட் - 19 அச்சுறுத்தலுக்கு எதிரான போராட் டத்தை சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து மேற்கொண்டுள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை கொவிட் 19 போராட்டத்திலும் வெற் றியடைந்து வருகிறது என்பதை அனைத்து விடயங்கள் ஊடாகவும் அவதானிக்க முடிகிறது. பொதுமக் கள் மத்தியில் நோய் பரவுவதனைத் தடுப்பதற்கு முப்படையினரும் பொலி ஸாரும் ஒரு பட்டாளம் போன்றுமுன் நின்று ஆற்றும் பணி, கொவிட் 19 நோயை இவ்வாறு கட்டுப்படுத்துவ தில் சுகாதாரப் பிரிவினருக்கு மிக வும் உறுதுணையாய் அமைந்தது என்பதில் சந்தேகமில்லை.

சமூக மட்டத்தில் 'சிவில்' மற்றும் 'இரா ணுவம்' என செயற்கையான பிள வொன்றை ஏற்படுத்துவதற்கு நல் லாட்சி அரசியல் கட்சிகள் மேற் கொண்டுள்ள வஞ்சகமான முயற் சியை நான் கண்டிக்கிறேன். ஏதாவது பதவியொன்றுக்கு ஓய்வுபெற்ற முப்படை அதிகாரியொருவரை நிய மிக்கும் போது அதனை அவர்கள் 'இராணுவ மயமாக்கல்' என அழைக்கின்றனர். ஓய்வுபெற்ற முப் படையினரும் சிவில் பிரஜைகளே. அவர்கள் இராணுவ உறுப்பினர் கள் அல்ல. அன்று இருந்த சங்க, மருத்துவர், ஆசிரியர், உழவர், தொழிலாளி சக்தியுடன் இன்று படையினரும் இணைந்துள்ளனர். நிச்சயமாக எமது அரசாங்கம் அதி காரத்திலுள்ளபோது பாதுகாப்புப் படையினரைச் சேர்ந்த முன்னாள் வீரர்கள் அரசாங்கத்தில் பல்வேறு பட்ட பதவிகளை வகிப்பார்கள் - என் றுள்ளது. (ப)



# இனப் படுகொலைக்கு அல்லைப்பிட்டியில் அஞ்சலி

அல்லைப்பிட்டி, மே 20

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் அல்லைப்பிட்டி புனித பிலிப்னேரியார் தேவாலயத்தில் நடைபெற்றது.

படையினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் கொல் லப்பட்ட பொதுமக்களின் நினைவாகவும், காணா மல் ஆக்கப்பட்ட ஜிம்பிராவுன் பாதிரியாரின் நினைவாகவும் இந்த அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட் டது. இராணுவம் மற்றும் பொலிஸாரின் தடைக ளைத் தாண்டியும் அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது. நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செய லாளர் செல்வராஜா கஜேந்திரன், தேசிய அமைப் பாளர் வி.மணிவண்ணன், சட்டத்தரணிகளான க.சுகாஸ், ந.காண்டீபன், திருக்குமரன், சோபிதன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்களான வ.பார்த் தீபன், வை.கிருபாகரன், தனுஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-20)

# வாகன வரி பத்திரம் பெற சிறப்புக் கருமபீடங்கள்

யாழ்ப்பாணம், மே 20

வாகன வரி அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாடா னது அனைத்து பிரதேச செயலங்களினூடாகவும், கைதடியில் அமைந்துள்ள வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள தலைமை அலுவலகத்தி னூடாகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் நலன் கருதி யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி ஆகிய இரு பிரதேச செயலகங்களிலும் விசேடகருமபீடங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அனைத் துக் கருமபீடங்களிலும் சனி, ஞாயிறு மற்றும் பொதுவிடு முறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களிலும் பெற் றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலாவதியான வாகன வரி அனுமதிப்பத்திரம் செலுத் துபவர்களுக்கான தண்டப்பணம் அறவிடப்படமாட்டாது என்பதுடன், வாகன வரி அனுமதிப்பத்திரங்களை எதிர் வரும் 31 ஆம் ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள் ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# நுண்கடன் வழங்கல்

யாழ்ப்பாணம், மே 20

கிராம சக்தி திட்டத்தில் உற்பத்தி கிராமமாகத் தெரிவு செய் யப்பட்டுள்ள மண்கும்பான் கிராமத்தின் 15 பயனாளிக ளுக்கு தலா 20 ஆயிரம் ரூபா நுண்கடன் வழங்கப் பட்டது.

வேலணை பிரதேச செயலரின் ஏற்பாட்டில் மண்கும் பான் கிராம சக்திச் சங்கம் இந்த நுண்கடனை அண்மை யில் வழங்கியது. இந்த நிகழ்வில் மண்கும்பான் கிராம அலுவலகர் கே.வாகீசன் அபிவிருத்தி உத்தியோக்ததர் கிறிஸ்ரி ஆதிரைச் சங்கத் தலைவர் அ.அன்ரன் யேசு தாசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

# புலி ஆதரவாளர்கள் இன்னும் ஓயவில்லை

## அங்கலாய்க்கிறார் பீரிஸ்

கொழும்பு, மே 20

போர் நிறைவடைந்தாலும், விடுதலைப் புலிகள் அமைப் புக்கு ஆதரவான அமைப்புகளின் செயற்பாடுகள் நிறைவு பெறவில்லை என்று பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

30 வருட கால சிவில் போர் நிறைவு பெற்று 11 வருடங் கள் பூர்த்தியாகிறது. பல இழப்புகளுக்கு மத்தியிலே போர் வெற்றி கொள்ளப்பட்டது. இராணுவத்தினருக் கான உரிய கௌரவத்தை ஜனாதிபதி வழங்கியுள்ளார். போர் நிறைவுபெற்றுள்ளதே தவிர, போருக்கான அடிப் படை நோக்கம் இல்லாதொழிக்கப்படவில்லை. விடுத லைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவாக செயற்பட்ட சர் வதேச அமைப்புக்கள் இன்றும் பிரிவினைவாதக் கொள்கையுடன் செயற்பட்டு நாட்டுக்கு எதிரான அழுத் தங்களைப் பிரயோகிக்கின்றன - என்றார். (க)

# முன்னணியை அழிப்பதில் பேரினவாத சக்திகள் தீவிரம்

## அதன் தலைவர் கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,மே 20

2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளை எவ்வாறு அழித்தார்களோ அதேபோல தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் அழித்துவிட வேண்டும் என சிங்கள பேரினவாத சக்திகளும் சில தமிழ் அரசியல் சக்தி களும் பலமாகச் செயற்பட்டு வருகின்றன என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகு மார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே கஜேந்திர குமார் பொன்னம்பலம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் இன் றுவரை நாம் சோரம்போகாமல் ஒரே நிலைப்பாட்டில் இருப்பதாலும் எம்மை விலைகொடுத்து வாங்கமுடி யாது என்பதாலும் எமக்குப் பல்வேறு முட்டுக்கட்டை களை போட்டு எம்மை அழிக்கத் துடிக்கின்றனர். அதற் காக சட்டவிரோதமாக சட்டத்தைப் பாவிக்கின்றனர். எனி னும் எமது பயணம் ஓயாது. நாம் தமிழ் மக்களுக்காக தொடர்ந்து பாடுபடுவோம். முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தைப் பலரும் பல இடங்களில் நினைவு கூர்ந்தனர். எனினும் எமது கட்சியையும் எமது உறுப்பினர்களையும் திட்டமிட்ட வகையில் இராணுவத்தினரும், பொலிஸாரும் அச்சுறுத்தியுள்ளனர். கொரோனா வைரஸ் தொற்றைக் காரணம் காட்டி அரசு அரசியல் பின்னோக்கத்துக்கா கவே இவ்வாறான செயற்பாடுகளை முன்னெ டுக்கின் றனர். எமது கட்சியின் உறுப்பினர்கள், அமைப்பாளர் கள் மீது இராணுவத்தினரும் பொலிஸாரும் பல வழிக ளில் அச்சுறுத்தல்களைப் பிரயோகித்துள்ளனர். சிலர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். பெண் உறுப்பினர்களை இராணுவத்தின் ஊடாகச் சுடுவோம் எனவும் பொலிஸார் மிரட்டியுள்ளனர். எமது உறுப்பினர்கள் மீது அச்சுறுத்தல்களை மேற்கொண்ட இராணுவம் பொலிஸார் மீது தனித்தனியே சட்ட நடவடிக்கை எடுக்க ஆலோசித்து வருகின்றோம். மிக விரைவில் அவர் கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்போம்-என்றார். (ப-2620)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## சண்டித்தனம் சரிவராது

“எம்மைப் போன்ற ஒரு சிறிய நாட்டில் இத்தகைய அர்ப்பணிப்புக்களைச் செய்துள்ள படைவீரர்கள் தேவையற்ற அழுத்தங்களுக்கு உள்ளாக நான் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. எமது நாட்டுக்கு அநீதியான வகையில் ஏதேனும் ஒரு சர்வதேச நிறுவனம் அல்லது அமைப்பு தொடர்ந்தும் செயற்படுமாக இருந்தால் அந்த நிறுவனத்தின் அல்லது அமைப்பின் உறுப்புரிமையிலிருந்து இலங்கையை விலக்கிக்கொள்ள நான் ஒருபோதும் பின்நிற்கப் போவதில்லை”

இப்படித் திருவாய் மலர்ந்துள்ளார் இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ.

அண்மைக்காலமாக ஐ.நா சபையின் மனித உரிமைகள் பேரவை , தெற்காசியாவுக்கான மனித உரிமைகள் கண்காணிப்பகம் உள்ளிட்ட பல சர்வதேச அமைப்புகள் இலங்கை அரசின் இராணுவ மயப்படுத்தலையும், மிருசுவில் படுகொலையாளி சுனில் ரத்நாயக்கவின் விடுதலையும் காரசாரமாகக் கண்டித்து, அறிக்கைகள் மூலம் இலங்கை அரசைக் கிழிகிழியென்று கிழித்து தொங்கப்போட்டிருந்தன. இந்தப் பின்னணியிலேயே போர் வெற்றி நாளில் கோத்தாபய இப்படிக் கொக்கரித்திருக்கிறார்.

நாட்டில் கொரோனா தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. எங்கும் அச்சத்தின் ரேகைகள். எதிர்காலம் பற்றிய கேள்விக்குறிகளோடு மக்கள். பொருளாதாரம் என்றுமில்லாதவாறு அடிவாங்கி, கோமா நிலையை எட்டி விட்டது. பஞ்சமும், பட்டினியும் நாட்டில் மிகப்பெரியளவில் உருவாவதற்கான ஏதுநிலை தென்படத் தொடங்கியுள்ளது. கூடவே தேர்தல் எப்போது நடக்கும் என்ற குழப்பங்கள். இப்படிப்பட்ட சூழலில் அவற்றைப் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாது, தன்னுடைய படைவீரர்களுக்கு அழுத்தம் கொடுத்தால் ,அதாவது அவர்கள் மீது போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட்டால் , அதற்கு உடந்தையாக இருக்கும் ஐ.நா சபையில் இருந்து வெளியேறுவோம் என்பதைத்தான் கோத்தாபய , பெயர் குறிப்பிடாமல் சொல்லியிருக்கிறார்.

இப்போதுள்ள இக்கட்டான சூழ்நிலையில் இலங்கை சர்வதேச நாடுகளிலும், சர்வதேச அமைப்புகளிலுமே முற்றிலுமாகத் தங்கியிருக்க வேண்டிய நிலை. ஆனானப்பட்ட அமெரிக்கா போன்ற நாட்டைக் கூட, சர்வதேச அமைப்புகளிடம் கையேந்த வைக்கும் நிலைக்கு கொரோனா கொண்டுசென்றுள்ள நிலையில், இலங்கை எம்மாத்திரம்? நிதியுதவி, கடன்கள், மருந்துகள், உணவுப்பொருள்கள் என எல்லாவற்றுக்கும் ஐ.நா போன்ற சர்வதேச அமைப்புக்களை நம்பியே இலங்கை முன்னரும் இருந்தது, இப்போதும் இருக்கின்றது. இந்தச் சீத்துவத்தில் தான், “எங்கள் படையினரில் கைவைத்தால் வெளியேறுவோம்” எனச் சண்டித்தனத்தோடு வெருட்டியுள்ளார் கோத்தாபய. இப்படியான முரட்டுத்தனமான சர்வதேச அணுகுமுறை காரணமாகவே மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேசம் , ஆட்சியில் இருந்தே அகற்றியது. அதே நிலையை வலிந்து கோத்தாபயவும் உருவாக்குகிறார் போலும். இப்படிப்பட்ட சண்டித்தனங்கள் , பொதுத்தேர்தலில் சிங்களப் பேரினவாதிகளின் வாக்குகளை வேண்டுமானால் கோத்தாபயவின் கட்சிக்குப் பெற்றுத்தரலாம். ஆனால் அது ஒரு உடனடி இலாபமே. ஆனால் நீண்டகால நோக்கில் மிகப்பெரிய நெருக்கடிக்குள் கோத்தாபய தரப்பை மாத்திரமல்லாமல்.,அவரால் ஆளப்படுகின்ற ஒற்றைக் காரணத்துக்காக ஒட்டுமொத்த மக்களும் தள்ளப்படும் அபாயம் நெருங்கிக் கொண்டிடிருக்கிறது. “யாகாவராயினும் நா காக்க” என்ற குறள் வரிகளை கோத்தாபய அடிக்கடி தனக்குத்தானே நினைவூட்டுவதல் நலம்.

# தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தாக எந்த சக்தியும் மாற இடமளியோம்

### பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு



**கொழும்பு, மே 20**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் எந்தச் சக்தியும், தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தானதாக மாறுவதற்கு அனுமதியளிக்க முடியாது என்று பாதுகாப்புச் செயலர் கமல் குணரட்ன தெரிவித்துள்ளார்.**

2019ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி 30 ஆண்டுகாலப் போரை முடிவுக்கு கொண்டு வந்ததைத் தொடர்ந்து முப்படையினரும், பொலிஸாரும், சிவில் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்களும் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகள் வரை நாட்டில் ஒரு பயங்கரவாத சம்பவம் கூட நிகழாதை உறுதி செய்து அமைதியைப் பாதுகாத்தனர்.

முப்படை மற்றும் சிவில் பாதுகாப்பு படையணியை சேர்ந்த 29 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். 60 ஆயிரம் பாதுகாப்பு படையினர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகினர்.

தேசத்தின் வெற்றிக்கான தங்களது நீண்ட பயணத்தின் போது 14 ஆயிரம் போர் வீரர்கள் வாழ்நாள் காயங்களை சந்தித்து சக்கர நாற்காலிகளுக்குள்ளும் கட்டில்களுக்குள்ளும் முடக்கப்பட்டனர்.

இரண்டு வருடங்களும் பத்து மாதங்களும் நீடித்த இறுதிக் கட்ட வன்னி நடவடிக்கையின் போது 5 ஆயிரத்து 900 படையினர் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்தனர். 29 ஆயிரம் பேர் அங்கவீனர்களாகி நிரந்தரமான கடும் காயங்களுடன் வாழ்கின்றனர்.

அத்துடன், தேசத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறும் என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ,5)

### பல்கலைகழக அனுமதிக்கான விண்ணப்பங்களை சான்றுப்படுத்த

# பாடசாலைகளைத் திறப்பதற்கு அதிபர்களுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, மே 20

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும் மாணவர்களது விண்ணப்பப் படிவங்களை சான்றுப்படுத்தும் நடவடிக்கைகளை இன்று புதன்கிழமை, நாளை வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பாடசாலையில் முன்னெடுக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் பாடசாலை அனுவலகங்களைத் திறந்து மாணவர்களது விண்ணப்பங்களை சான்றுப்படுத்தி வழங்குமாறு அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

சுகாதார அதிகாரிகளால் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து சுகாதார நடைமுறைகளும் அபாயங்களைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கையை முன்னெடுக்குமாறு கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. அந்தந்த பாடசாலை ஒவ்வொன்றின் அதிபர் அல்லது உப அதிபர் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தேர்ச்சிபெற்று பல்கலைக்கழக சேர்க்கை பெற்ற மாணவர்களின் விண்ணப்பங்களுக்கு சான்றுதிப்படுத்தி வழங்க வேண்டும் என்றும் கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது. (ஒ,5)

# இன்று மின்தடை

யாழ்ப்பாணம், மே 20

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் இன்று புதன்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை வவுனியா மாவட்டத்தில் துட்டுவாகை, கப்பாச்சி ஆகிய இடங்களிலும், மன்னார் மாவட்டத்தில் வட்டுபித்தன்மடு, புதுக்காமம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

### போர் வெற்றி விழா

# அணிவகுப்பு ஒத்திகையில் பங்கேற்ற கடற்படைச் சிப்பாய்களுக்கு தொற்று

கொழும்பு, மே 20

போர் வெற்றி அணிவகுப்பில் கலந்து கொள்ள பயிற்சியில் ஈடுபட்டு வந்த இரண்டு கடற்படை சிப்பாய்கள் கொரோனா தொற்றுக்கு இலக்கானதாக தகவல் வெளியாகியுள்ளது. அவர்களிடம் நடத்தப்பட்ட முதலாவது பி.சி.ஆர். சோதனையில் கொரோனாத் தொற்றுக்குள்ளானதாக முடிவு வெளியானது. அவர்களிடம் இரண்டாவது பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டதில் தொற்று இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த சிப்பாய்கள் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். விரைவில் மீளவும் அவர்கள் சோதனைக்குட்படுத்தப்படவுள்ளனர். (ஒ.5)

# ஏப்ரல் 21 தாக்குதல் ஐவருக்கு பிடியாணை

கொழும்பு, மே 20

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட ஸஹ்ரானின் சகோதரி, சியோன் தேவலாயத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் உட்பட 63 பேரையும் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் மன்ற நீதிபதி ஏ.சி.றிஸ்வான் காணொலி மூலம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டார். அத்துடன் நீதிமன்றப் பிணையில் சென்று, நீதிமன்றில் சமூகமளிக்காத 5 பேருக்கும் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

கடந்த வருடம் உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் ஸஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரேலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காகச் சென்றார்கள் எனவும் சந்தேகத்தின் பேரில் காத்தான்குடியைச் சேர்ந்த 64 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 5 பேர் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் 59 பேர் தொடர்ந்து விளக்கமறியல் வைக்கப்படடுள்ளனர்.

இதேவேளை, இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய ஸஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், சியோன் தேவாலய தற்கொலைக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட ஆசாத்தின் தாயார் உட்பட 4 பேர் விளக்கமறியலில் தொடர்ந்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் குறித்த 4 வெவ்வேறு வழக்கு இலக்கங்களைக் கொண்ட 68 பேரின் வழக்குகள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

அவர்கள் வெவ்வேறு மாவட்டத்திலுள்ள சிறைகளில் வைக்கப்பட்டுள்ளதுடன், நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் காரணமாக நீதிபதியின் ஆலோசனைக்கமைய அழைத்து வரமுடியாத காரணத்தால் சிறைச்சாலை அதிகாரிகளின் ஏற்பாட்டில் காணொலி மூலம் மட்டக்களப்பு நீதிவான் மன்ற நீதிபதி ஏ.சி.றிஸ்வான் 63 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் ஸஹ்ரான் குழுவினருடன் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காகச் சென்றார்கள் என்ற சந்தேகத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த 64 பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஐவர் நீதிமன்றப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இவ்வாறு நீதிமன்றப் பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் நீதிமன்றில் முன்னிலையாகாததை அடுத்து, அவர்களைக் கைது செய்யுமாறு நீதிவான் பிடியாணை பிறப்பித்தார். (க)

# 30 வருட போர் வெற்றி எதிர்பாராது கிடைத்தது

## பொன்சேகா கூறுகின்றார்

கொழும்பு, மே 20

**இலங்கையில் நடைபெற்ற 30 வருடங்கள் தொடர்ந்த போரை எம்மால் வெற்றிகொள்ளமுடியும் என்று ஆரம்பத்தில் யாரும் நம்பவில்லை. அர்ப்பணிப்பு மற்றும் ஆழ்ந்த நம்பிக்கையால் தீவிரவாதிகளிடமிருந்து நாட்டை மீட்க முடிந்தது.**



இவ்வாறு முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

போர் நிறைவடைந்து 11 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது போரில் அர்ப்பணிப்புடன் போராடிய இராணுவத்தினருக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் கௌரவத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இராணுவத்தில் 5 ஆயிரத்து 200 பேர் தமது உயிரைத் தியாகம் செய்தனர். சுமார் 3 ஆயிரம் பேர் அங்கவீனமடைந்தனர். 15 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். அவ்வாறான நிலையில் பெற்றுக் கொண்ட வெற்றியைக் கொண்டாட விரும்புகின்றோம்-என்றார். (க)

# ஓவியப் போட்டி

துளிர் நற்பணி மன்றம் மற்றும் சிறகுகள் அமையம் இணைந்து நடத்தும் ஓவியப்போட்டிக்கு ஆக்கங்களை அனுப்பலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிவு 1 இல் தரம் 3 தொடக்கம் 6 வரையான மாணவர்கள் "எங்கள் ஊர்" என்ற தலைப்பிலும், பிரிவு 2 இல் தரம் 7 தொடக்கம் 9 வரையான மாணவர்கள் "மரம் மண்ணின் வளம்" என்ற தலைப்பிலும், பிரிவு 3 இல் தரம் 10 தொடக்கம் 12 வரையான மாணவர்கள் "போதை ஒழிப்பு" என்ற தலைப்பிலும் ஓவியங்களை வரையலாம்.

sirakukalinfo@gmail.com என்ற மின்னஞ்சல்முகவரிக்கும், 0759 580082 என்ற வட்சப் இலக்கத்துக்கும் எதிர்வரும் 28 ஆம் திகதிக்குமுன்னர் ஆக்கங்களை அனுப்பலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களுக்கு 077946 2554, 0774943113 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும். (சு-222)



# பலாலியிலிருந்து 98 பேர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 20

பலாலி விமானப்படைத் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த 98 பேர் நேற்றுத் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தையைச் சேர்ந்த 98 பேரே இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களில் 6 மாதக் குழந்தை உட்பட 10 சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர். 22 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களுக்குக் கொரோனாத் தொற்று இல்லை என்று பரிசோதனையில் கண்டறியப்பட்டதையடுத்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டு நேற்றுக் காலை அவர்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

இந்த நிகழ்வில் இலங்கை பலாலி விமானப் படைத் தளபதி எயா மார்சல் டி.எல்.எஸ்.டயஸ் சார்பாக பலாலி விமானப்படைத் தளபதி குறூப் கப்டன் எ.வி.ஜயசேகர கலந்து கொண்டு விடுவிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவச் சான்றிதழ்களை வழங்கினர். (ப-20)

# முல்லைத்தீவில் 4 வீடுகள் சேதம்

அம்பான் புயலின் தாக்கத்தால், முல்லைத்தீவு மாவட்டத்தில் கடல் கொந்தளிப்பு மற்றும் காற்றின் வேகம் அதிகரித்துள்ளது. நான்கு வீடுகள் பகுதியள்வில் சேதமடைந்துள்ளன என்று மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கடல் அலை 15 அடிவரை உயர்வடைந்து காணப்படுவதால், தாழ்வான கரையோரப் பிரதேசங்களில் கடல்நீர் கரை ஏறியுள்ளது. முக்கியமாக நாயாறு, கள்ளப்பாடு, தீர்த்தக்கரை போன்ற பகுதிகளில் புறவெள்ளம் போட்டுள்ளது என்றும், அதனால் படகுகள், தொழில் உபகரணங்கள் அனைத்தும் கரையில் இருந்து ஏற்றி விடப்பட்டுள்ளன என்றும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடற் கொந்தளிப்பு காரணமாக முல்லைத்தீவு மாவட்டக் கடற்தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை. விசுவமடு பிரதேசத்தில் வீசிய கடும் காற்றுக் காரணமாக, பல ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழைகள் சரிந்து வீழ்ந்துள்ளன.

கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் பகுதிகளில் வீசிய கடும் காற்று காரணமாக நான்கு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. வீடுகளின் சேதங்கள் தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவர்களுக்கான முதற்கட்ட உதவிகள் வழங்கும் நடவடிக்கை மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எஸ்.லிங்கேஸ்வரகுமார் தெரிவித்துள்ளார். (க-19)

# நினைவேந்தலைத் தடுப்பதற்கு முளைத்த சோதனைச் சாவடிகள்

## சாள்ஸ் நிர்மலநாதன் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, மே 20

முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வுக்கு சரியான நேரத்தில் சமூகமளிக்க முடியாதவாறு இலங்கையின் படைத்தரப்பு சோதனைச் சாவடிகளை ஏற்படுத்தி தடைகளை ஏற்படுத்தி இருந்தது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

படையினரின் சோதனைச் சாவடிகளுக்கு மத்தியிலும் மன்னாரில் இருந்து முள்ளிவாய்க்கால் சென்று உயிரிழந்த மக்களுக்கு வணக்கம் செலுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

தமிழ் இனத்துக்காகப் போராடிய போராட்டம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டது.

அந்தப் போரில் மண்ணுக்காக இறந்த போராளிகள் பொது மக்களை நினைவுகூரும் இடமாக ஆண்டுதோறும் முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் மக்கள் வந்து அஞ்சலி செலுத்துவார்கள். நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக அதிகளவான மக்கள் கூடமுடியாத நிலை இருந்த போதும் மக்கள் வணக்கம் செலுத்தியுள்ளார்கள். இருந்தும் இலங்கையின் படைத்தரப்பு குறித்த நேரத்தில் இங்கு சமூகமளிக்கமுடியாதவாறு சோதனைச் சாவடிகளை அமைத்து தடைகளை ஏற்படுத்தியிருந்தது. அந்தச் சோதனைச் சாவடிகளை மீறி சில வீதிகளால் முள்ளிவாய்க்கால் சென்று உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தமுடிந்தது-என்றார். (ப-19)

# முல்லையில் 400 பேர் தனிமைப்படுத்தலில்

முல்லைத்தீவு, மே 20

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக தெற்கைச் சேர்ந்த கடற்படையினரின் குடும்பங்கள் மற்றும் உறவினர்கள் என 400 பேர் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கேப்பாபிலவு விமானப்படைத்தள தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் 250 பேரும், 59 ஆவது படைப்பிரிவின் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் 150 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் நேற்று முன்தினம் மாலை பேருந்துகளில் அழைத்து வரப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-19)

# கொரோனாவா? டெங்கா? கண்டறிவதில் சிக்கல்

## சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

**கொழும்பு, மே 20**



**கொவிட் 19 வைரஸ் தொற்று அபாயத்துக்குள்ளும், நாட்டில் தற்போது டெங்குத் தொற்றுப் பரவக்கூடிய அபாயம் உள்ளதால், தொற்றை அடையாளப்படுத்த மருத்துவர்கள் திணற வேண்டியுள்ளது என்று சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

டெங்கு, கொவிட் 19 ஆகிய இரண்டு நோய்களுக்கும் காய்ச்சல் பிரதான அடையாளமாகக் காணப்படுகின்றது. அதனால் நோயாளர் எந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதைக் கண்டறிவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு வரும் இலங்கையர்கள் முழுமையாகத் தனிமைப்படுதல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டே தமது பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். அவ்வாறு வந்தவர்களின் ஒரு சிலர் கொவிட் 19 தொற்றாளர்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது. எனினும் அது குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை.

எவர் இலங்கைக்குள் வருகை தந்தாலும், அவர்கள் முழுமையாகப் பரிசோதிக்கப்பட்டே அனுப்பப்படுவார்கள். நோயாளர்களாக இருந்தாலும், ஆரோக்கியமானவர்களாக இருந்தாலும் அவர்கள் 21 நாள்கள் தனிமைப்படுதல்களுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

இலங்கைப் பிரஜைகள் மாத்திரமே இப்போது வரையில் நாட்டுக்கு வரவழைக்கப்படுகின்றனர். அவர்கள் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவதால் கொவிட் 19 வைரஸ் தொற்றுநோய் சமூகப்பரவலாக மாறுவதற்கான வாய்ப்புகள் எதுவும் இல்லை.

எனினும் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள் திறக்கப்படும் நேரங்களில் வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வரும் நிலையில், மீண்டும் நெருக்கடி நிலைமை ஏற்படும். அவர்களை எவ்வாறு கண்காணிப்பது என்பதில் சிக்கல் உள்ளது. எனவே அது குறித்தும் நாம் ஆராய்ந்து வருகின்றோம். விமான நிலையங்கள் மீண்டும் திறக்கப்படும் நேரங்களில் எமது யோசனைகளுக்கு அமைய மாற்று வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.

கொவிட் 19 நோயால் பாதிக்கப்பட்டு முகாம்களில் உள்ளவர்களை விடவும், குணமடைந்து வீடுகளுக்குச் சென்றவர்களின் எண்ணிக்கை அதிகமாகும். ஆகவே நோய்த் தாக்கங்களில் இருந்து நாம் விடுபடுகின்றோம் என்பதே இதில் தெரிகின்றது. தொடர்ந்தும் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதுவரையில் 45 ஆயிரத்துக்கும் அதிகமான பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதேபோல் நாட்டில் தொடர்ந்தும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு மக்களை மிகவும் சிரமங்களுக்கு உட்படுத்தி வருகின்றோம் என்றே நாம் கருதுகிறோம்.

ஆனால் இந்த நடவடிக்கைகள் அனைத்துமே மக்களைப் பாதுகாக்கவே தவிர வேறு எதற்காகவும் அல்ல என்பது மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். ஏனைய நாடுகள் இன்று மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு பல இலட்சக்கணக்கான உயிரிழப்புகளைச் சந்தித்து வருகின்ற நிலையிலும், நாம் எமது மக்களைப் பாதுகாத்துள்ளோம் என்றால் அது எமது இந்த வேலைத்திட்டத்தினாலேயேயாகும்.

எனினும் இந்த நிலைமை தொடர்ந்தும் நீடிக்காது. படிப்படியாக நாடு முழுமையாக விடுவிக்கப்படும். கடந்த 16 நாள்களாக நாட்டில் எந்தவொரு நோயாளரும் அடையாளம் காணப்படவில்லை. தனிமைப்படுத்தல் முகாம்களில் மட்டுமே நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

எனவே படிப்படியாக மக்கள் வழமைக்கு வர முடியும். ஆனால் மீண்டும் நோய்த் தொற்றுகள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன. எம்மால் இவ்வாறான நோய்களில் இருந்து முழுமையாக விடுபட முடியாது. கொவிட் 19 நோய் எம்முடனே சமூகத்தில் வாழும்.

எனினும் மக்கள் மிகவும் கட்டுப்பாடுகளுடன் சமூக பொறுப்புக்களை உணர்ந்து செயற்பட வேண்டும். இப்போது வரையில் கடற்படையில் தொடர்ந்தும் நோயாளர்கள் கண்டறியப்பட்டு வருகின்றனர். இது மாத்திரமே இப்போது எமக்கு நெருக்கடியாக உள்ளது.

தொடர்ச்சியாக நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதன் காரணத்தால் மாற்று நடவடிக்கைகள் கையாள வேண்டியுள்ளது. எனவே கடற்படையினர் குறித்து மாற்று நடவடிக்கைகள் எதிர்காலத்திலும் கையாளப்படும்.

அதேபோல் கொவிட் 19 வைரஸ் தொற்றுநோய் குறித்த பரிசோதனைகளுக்குப் பின்னால் நாம் சென்று கொண்டிருப்பதால் இந்த நிலையில் டெங்கு நோய் பரவல் குறித்த காரணிகளை நாம் மறந்து விட்டோம். இப்போது நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக அதிகளவில் டெங்கு நோய் பரவக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

டெங்கு, கொவிட் 19 இரண்டு நோய்களுக்கும் காய்ச்சல் பிரதான அடையாளமாகக் காணப்படுகின்றது. எனவே மக்கள் இது குறித்தும் அதிக கவனம் செலுத்த வேண்டும். எவ்வாறான நோய் அறிகுறிகள் தென்பட்டாலும், உடனடியாக மக்கள் மருத்துவப் பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டும்-என்றார். (க)



## போதனா மருத்துவமனையில் கால்கடுக்க காத்திருப்பு

யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் செல்லும் பலரும் மணிக்கணக்கில் கொழுத்தும் வெயிலில் காத்திருக்க வைக்கப்படுகின்றனர் என்று விசனம் தெரிவிக்கின்றனர்.

இங்கு மாதாந்த கிளினிக் சிகிச்சைக்காகச் செல்லும் முதியவர்க்ள் வீதியில் கால்கடுக்க வெயிலின் மத்தியிலேயே காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது என்று முதியவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதுபற்றி மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியிடம் கேட்டபோது, இந்த விடயம் தொடர்பில் உடன் கவனத்தில் எடுக்கப்படும் - என்று தெரிவித்தார். (த-105)

## பிரதேச சபைக்குள் புலிகளின் செயற்பாட்டை ஊக்குவிக்கோம்

### கரைச்சி தவிசாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 20

அரச திணைக்களம் என்ற வகையில் விடுதலைபுலிகள் என்ற இயக்கத்தை அல்லது அவர்களின் செயற்பாட்டை ஊக்குவிக்கக்கூடிய செயற்பாடுகளை நாங்கள் ஒருபோதும் முன்னெடுக்கப்போவதில்லை. பிரதேச சபைகளினுடைய செயற்பாடுகளுக்குள்ளே சட்டத்துக்குப் புறம்பான விடயங்களைக் கொண்டு வந்து அரசியல்மயமாக்கும் செயற்பாடாக பொலிஸாரின் செயற்பாட்டைப் பார்க்கிறேன்.

இவ்வாறு கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் உள்ள சேவைச்சந்தை, பசுமைப் பூங்கா ஆகியன கடந்த மூன்று நாள்களாக இராணுவத்தனரின் கட்டுப்பாட்டில் உள்ளது. அவற்றின் ஒரு பகுதியில் இராணுவத்தினர் வசப்படுத்தி உள்ளனர். கரைச்சிப் பிரதேச சபையின் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத வகையில் இந்தப் பிரதேசம் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் கிளிநொச்சி பொலிஸார் நீதிமன்றத் தடை உத்தரவைப் பெற்றுக் கையளித்திருந்தனர். 500 பேருக்கு மேல் நபர்களை இணைத்து விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து நீதிமன்றைத் திசை திருப்பும் வகையில் பொலிஸார் குறித்த தடை உத்தரவைப் பெற்று வழங்கியுள்ளனர். அவ்வாறான நிகழ்வொன்றை நாம் ஏற்பாடு செய்திருக்கவில்லை. பிரதேச சபை என்பது ஓர் அரச திணைக்களம். அந்தத் திணைக்களத்தில் ஒருபோதும் விடுதலைப் புலிகள் இயக்கத்தையோ அல்லது அதன் செயற்பாடுகளையோ ஊக்குவிக்கும் வகையில் செயற்படப்போவதில்லை. பொலிஸார் பிரதேச சபை சட்டங்களுக்கு மேல் வெவ்வேறு விடயங்களைக் கூறி அதனை அரசியல்மயமாக்கி நீதிமன்றத்தைத் திசை திருப்பும் வகையில் நடந்து கொண்டுள்ளமையாகவே அதனைப் பார்க்கின்றேன். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொள்ள நான் சென்றபோது தர்மபுரம் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் திருப்பி அனுப்பப்பட்டேன். வெளிமாவட்டங்களுக்குச் செல்ல முடியாது என இராணுவத்தினர் தெரிவித்திருந்தனர். அதேபோன்று கிளிநொச்சிக்கு வருகைதந்த பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் ஆனையிறவுப் பகுதியில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டார். இவ்வாறான இராணுவத்தினரின் செயற்பாட்டை பொறுப்புடன் கண்டிக்கின்றேன்-என்றார். (ப-6,35,214)

## முள்ளிவாய்க்கால் படுகொலை உணர்வுபூர்வமாக கடைப்பிடிப்பு

மட்டக்களப்பு, மே 20



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு களுவாஞ்சிகுடியில் நேற்று முன்தினம் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள சி.மூ.இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் காரியாலயத்தில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உப தலைவர் நா.நகுலேஸ், மண்முனை தென்எருவில்பற்றுப் பிரதேச சபையின் உப தவிசாளர் திருமதி.க.ரஞ்சினி, போரதீவுப்பற்று மற்றும் மண்முனை தென்எருவில்பற்றுப் பிரதேச சபைகளின் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

"ஆறாத வலிகளுடன், உயிர் நீத்த அனைத்து, உறவுகளை என்றும் நினைவு கூருவோம்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பதாகையின் முன்னிலையில் உயிர் நீத்த உறவுகளை நினைவுகூர்ந்து சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ-46)

உதயன்
newuthayan.com



# ராஜபக்ஷக்களின் இராணுவயுகம்

திருமுருகன்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மீண்டும் ராஜபக்ஷக்களின் ஆட்சிக் காலத்தில் நேற்று முன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது. ராஜபக்ஷக்கள் 2014ஆம் ஆண்டு, அவர்கள் ஆட்சியில் இருந்த இறுதியாண்டுக்கும், 2020ஆம் ஆண்டு அவர்கள் ஆட்சிக்கு வந்த முதலாவது ஆண்டுக்கும் பல விடயங்கள் பொருந்திப்போகின்றன.

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்திருந்தாலும், 2010ஆம் ஆண்டுகளில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாக இருந்தது. முகாம்களுக்கு முடக்கப்பட்டிருந்த மக்கள், மீள்குடியேற்றம் நடைபெறாத சூழல், இராணுவத்தின் கிடுக்கிப்பிடி என்று நிலைமை மோசமாக இருந்தது.

2011ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உள்ளக ரீதியாகக் கடைப்பிடிக்கப்பட்டது. 2012ஆம் ஆண்டு மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் மக்கள் கூட்டமாக நினைவுகூருவதற்கான முயற்சிகள் தொடங்கின. 2013ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபை அமைந்த பின்னர் முள்ளிவாய்க்கால் நினைவு கூரல் மக்களை அணிதிரட்டி கடைப்பிடிக்கும் நிலைமையை 2014ஆம் ஆண்டு ஏற்படுத்தியிருந்தது.

நினைவுகூரல் எழுச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் மறுபுறம் அதனை அடக்கி ஒடுக்குவதற்கான முயற்சிகளும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன. ராஜபக்ஷக்களின் ஆட்சி நடந்து கொண்டிருந்தமையால், ஒடுக்கும் பணியை கனகச்சிதமாக இராணுவம் முன்னெடுத்தது.

### குருதிக் கொடை

2014ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி நடமாடும் குருதிக்கொடை முகாம் நடத்துவதற்கு சில தரப்புக்கள் ஏற்பாடு செய்திருந்தன. மே மாதம் 15ஆம் திகதியளவில் குருதிக்கொடை முகாம் நிறுத்தப்படுவதாக குருதி வங்கியின் மருத்துவ நிபுணரால் அறிவிக்கப்பட்டது. குருதி வங்கி மருத்துவ நிபுணராக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அப்போது பணி புரிந்தவர் சிங்களவர் ஒருவர். குருதி வங்கிகளில் போதியளவு குருதி இருப்பதால் இவை நிறுத்தப்படுவதாகக் காரணம் சொல்லப்பட்டது. விரும்பினால் மருத்துவமனைகளுக்குச் சென்று குருதி வழங்கலாம் என்று கூறப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை குருதி வங்கிக்கு மே மாதம் 18ஆம் திகதி குருதிக் கொடையாளர்கள் பலர் சென்றனர். ஆனால் அங்கு அவர்கள் நுழைவதற்கு கூட அனுமதிக்கப்படவில்லை. குருதி வங்கியில் மிக நீண்ட வரிசை இருந்தது. அந்த வரிசையில் நின்றிருந்தவர்கள் எவரும் தமிழர்கள் அல்ல. சிங்கள இராணுவப் புலனாய்வாளர்கள். குருதியை வழங்குவதற்காக அவர்கள் வரிசையில் காத்திருக்கவில்லை. மாறாக யாரும் அங்கு வந்து குருதியை வழங்கிவிடக் கூடாது என்பதற்காகத்தான் அந்த ஏற்பாடு. இதற்கு குருதி வங்கியும் உடந்தை.

ராஜபக்ஷக்கள் ஆட்சியின் கடைசி ஆண்டான 2014இல் அந்த நிலைமை என்றால், அவர்களின் ஆட்சியின் மீள் வருகையின் முதலாவது ஆண்டான 2020இலும் அதையொத்த நிலைமைதான்.

இந்த வருடமும் குருதிக்கொடை முகாம் நடத்துவதற்கு சில தரப்புக்கள் ஒழுங்குகள் மேற்கொண்டன. முதலில் அதற்கு இணங்கிய குருதி வங்கியினர் பின்பு பின்வாங்கினர். கொரோனா காரணமாக நடமாடும் குருதிக்கொடை முகாம் நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனாலும், மே மாதத்தின் ஆரம்பத்தில் நடமாடும் குருதிக் கொடை முகாம்கள் நடத்தப்பட்டிருந்தன. அப்போதெல்லாம், கொரோனா பரவல் உச்சத்திலிருந்த போதெல்லாம் அனுமதித்திருந்த குருதி வங்கி, மே 18ஆம் திகதி குருதி கொடை முகாம் நடத்தினால் மாத்திரம் கொரோனா வந்துவிடும் என்று புதுக்கதை சொல்லியது.

### காலால் மிதித்தல்

2014ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபை அமையப்பெற்றிருந்தது. வடக்கு மாகாணசபைக்கு முன்பாக அப்போதைய மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைச் செய்திருந்தார். மாகாணசபைக் கட்டடத்துக்குள் பிரவேசிக்க அனுமதி கிடைக்காததால், மாகாணசபை வளாகத்தின் வெளியே செய்தார். வாழைத்தண்டு வைத்து அதில் சட்டி வைத்து ஈகைச் சுடரேற்றப்பட்டது. அங்கு சூழ்ந்திருந்த பொலிஸார் அதனைத் தட்டி காலால் மிதித்தனர்.

2020ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள முற்போக்கு தமிழ்த் தேசிய கட்சியின் தலைமை அலுவலகத்தின் முன்பாக அதன் கட்சியின் செயலர் விஜயகாந்தால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஈகச்சுடர் ஏற்றப்பட்டிருந்தது. சிறிது நேரத்தில் அந்த வீதியால் இராணுவ வாகனத்தில் சென்ற சிப்பாய் ஒருவர், அதனைத் தட்டி வீழ்த்தி காலால் மிதித்தார்.

**கொரோனா பரவல் உச்சத்திலிருந்த போதெல்லாம் அனுமதித்திருந்த குருதி வங்கி, மே 18ஆம் திகதி குருதிகொடை முகாம் நடத்தினால் மாத்திரம் கொரோனா வந்துவிடும் என்று புதுக்கதை சொல்கிறது.**



### தடைகள்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஒருங்கிணைக்கப்பட்டு 2014ஆம் ஆண்டு நடத்தப்படவில்லை. பல்வேறு தரப்புக்களும் தமக்கு நினைவேந்தலை நடத்தக்கூடிய இடங்களில் அவற்றை ஒருங்கமைத்தார்கள். அதனால் வடக்கு மாகாணத்தின் பல்வேறு இடங்களிலும் மே 18ஆம் திகதி நினைவேந்தல் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. மே 17ஆம் திகதி வரை வடக்கின் நிலைமை ஒழுங்காக இருந்தது. ஆனால் மே 18ஆம் திகதி காலை வடக்கு முழுவதும் இராணுவத்தினரால் வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குச் செல்வதற்கு தடைகள் விதிக்கப்பட்டன.

கீரிமலையில் பிதிர்க்கடன் செலுத்துவதற்கு செல்ல முடியாதவாது வீதித் தடை, தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பவற்றின் அலுவலகங்களில் நினைவேந்தலைக் கடைப்பிடிக்கச் செல்லாதவாறு வீதித்தடை என்று இராணுவம் அமைத்திருந்தது.

அன்றைய தினம் நல்லூரில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் மேலங்கி இன்றி அங்கு நிறுத்தப்பட்டிருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் நல்லூரில் சென்று மாலை வழிபாடுகளை நடத்தினர். அங்கு இராணுவத்தின் நீளக் காற்சட்டையுடன், கையில் அர்சனைத் தட்டு, நெத்தியில் வீபூதி, சந்தனப் பொட்டு என்று வேடமிட்ட இராணுவச் சிப்பாய்களும் தாங்களும் வழிபாடுகளை நடத்துவதாக அங்கு ஒட்டி வந்து இடையூறுகளை ஏற்படுத்தினர்.

ஊரடங்கு, கொரோனா காரணமாக மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்து மட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்து அது தளர்த்தப்பட்டிருந்தாலும், மே 18ஆம் திகதி திடீரென மீண்டும் அவை முளைத்தன. முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தை நோக்கிச் சென்றவர்கள் தடுக்கப்பட்டனர். நினைவேந்தலை நடத்தமுடியாதவாறு இராணுவப் பிரசன்னம் அதிகரிக்கப்பட்டது. புலனாய்வாளர்கள் மூலை முடுக்கெங்கும் களமிறக்கப்பட்டனர். இதற்கு மேலதிகமாக நீதிமன்றத்தின் துணையுடன் தடுப்பதற்கான எத்தனங்களும் முன்னெடுக்கப்பட்டன. ராஜபக்ஷக்களின் ஆட்சிக் காலத்தில் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல்கள் எப்படி இருக்கப்போகின்றன என்பதைத்தான் இவை வெளிப்படுத்தி நிற்கின்றன. கொரோனாவைக் காரணம் காட்டி தற்போது அடக்குமுறையை வேறுவடிவில் பிரயோகித்திருந்தாலும், ராஜபக் ஷக்களின் எண்ணம், சிந்தனை நோக்கு என்பன எப்போதும் ஒன்றாகத்தான் இருக்கின்றன என்பதற்கு இவை சாட்சியம் கூறுகின்றன.

# அரசமைப்பை கவனத்திலெடுக்காது தேர்தல்கள் ஆணைக்குழு செயற்பட்டது

## அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணையில் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 20

நாடாளுமன்ற புதிய கூட்டத்தொடர் மூன்று மாதங்களுக்குள் இடம்பெறவேண்டும் என கூறப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு ஜூன் 2 ஆம் திகதி மூன்று மாதங்கள் நிறைவடைகின்றன. அப்படியானால் எப்படி ஜூன் 20 ஆம் திகதியை தேர்தல் திகதியாக அறிவிக்க முடியும். தேர்தல்கள் ஆணைக்குழு, அரசமைப்பைக் கருத்தில் கொள்ளாது தேர்தல்கள் சட்டத்தை மட்டும் பார்த்து கண்மூடித்தனமாக முடிவெடுத்துள்ளது. அப்படியானால் ஜூன் 20 ஆம் திகதி தேர்தல் திகதியாக அறிவிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலும் சட்ட வலுவற்றது. இவ்வாறு உயர் நீதிமன்றில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் வாதம் முன்வைத்துள்ளார்.

2020 பொதுத் தேர்தலை ஜூன் 20 ஆம் திகதி நடாத்த எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தையும் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்த தீர்மானத்தையும் வலுவிழக்கச் செய்யக் கோரி உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து அடிப்படை உரிமை மீறல் மனுக்களும் நேற்று முன்தினம் பரிசீலனைக்கு வந்தது.

அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான பரிசீலனையானது, வரலாற்றில் முதன் முறையாக உயர் நீதிமன்ற சம்பிரதாய அமர்வு இடம்பெறும் மண்டப அறையில் பரிசீலனைக்கு வந்தது. கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்த சமூக இடைவெளியைப் பேணுவது அவசியம் என்பதால், நீதி மன்றுக்குள் சமூக இடைவெளியை பேணும் நோக்கோடு சம்பிரதாய அமர்வு மண்டபத்தில் இம்மனுக்கள் பரிசீலனைக்கு வந்தன.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் நீதியரசர்களான விஜித் மலல்கொட, புவனேக அலுவிஹார, சிசிர டி ஆப்று மற்றும் பிரியந்த ஜயவர்தன ஆகியோர் கொண்ட நீதியரசர்கள் குழாம் முன்பே இம்மனுக்கள் விசாரணைக்கு வந்தன.

8 அடிப்படை உரிமை மீறல் மனுக்களும் 13 இடையீட்டு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் அவையனைத்தும் ஒன்றாக பரிசீலிக்கப்படும் என்பதையும் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய அறிவித்தார். முதலில் மனுதாரர்களின் வாதங்களும் பின்னர் பிரதிவாதிகளின் வாதங்களுக்கும் அவகாசம் வழங்கப்படும். மனுதாரர்கள் மற்றும் பிரதிவாதிகளின் சட்டத்தரணி பிரசன்னங்களை பதிவு செய்தார். அவர்களின் வாதங்களைத் தொடர்ந்தே இடையீட்டு மனுதாரர்கள் தொடர்பில் அவகாசம் வழங்கப்படும் என்று பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டினார்.

8 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் சார்பிலும், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், மூத்த சட்டத்தரணி சுரேன் பெர்ணான்டோ, மூத்த சட்டத்தரணி விரான் கொரயா, ஜனாதிபதி சட்டத்தரனி ஜெப்ரி அழகரட்னம், ஜனாதிபதி சட்டத்தரணி இக்ராம் மொஹம்மட், ஜனாதிபதி சட்டத்தரணி சொக்ஸி உள்ளிட்டோர் வாதங்களை முன்வைத்தனர்.

பிரதிவாதிகள் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் ஜனாதிபதி சட்டத்தரணி இந்திகா தேமுனி டி சில்வா, பி.பீ. ஜயசுந்தர சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா, தேர்தல்கள் ஆணைக்குழு, அதன் இரு ஆணையாளர்கள் சார்பில் சில வழக்குகளில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸும், சில வழக்குகளில் சட்டத்தரணி அருதி பெர்ணான்டோவும் முன்னிலையாகினர். ஆணைக்குழுவின் உறுப்பினரான ரட்ணஜீவன் கூல் சார்பில் சட்டத்தரணி அனில் மத்தும முன்னிலையாகினார்.

சட்ட மா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் இந்திகா தேமுனி டி சில்வா, அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பில் தமக்கு ஆட்சேபனங்கள் உள்ளதாக கூறினார். 'இந்த மனு கால வரையறைக்கு முரணானது. சில மனுக்களில் கட்டாயமாக பிரதிவாதி தரப்பாக பெயரிடப்பட வேண்டிய ஜனாதிபதிக்குப் பதிலாக சட்ட மா அதிபர் எனும் தரப்பு பெயரிடப்படவில்லை. இதனால் மனுதாரர்கள் கோரும் நிவாரணத்தை வழங்க இந்த மனுவை தொடர்ந்து முன்னெடுத்து செல்ல முடியாது' என தனது ஆட்சேபனத்தை பதிவு செய்தார்.

மற்றொரு பிரதிவாதியான ஜனாதிபதி செயலர் பி.பீ.ஜயசுந்தர சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா, ஆட்சேபனங்களை முன்வைத்தார். மனுக்களில் விடயங்கள் மறைக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், அவை சட்டத்துக்கு முரணானவை எனவும் குறிப்பிட்டார்.

அடிப்படை ஆட்சேபனைகளுக்கு பதிலளித்த ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அரசமைப்பின் 35 ஆவது உறுப்புரையை ஆதாரம் காட்டி, சட்டமா அதிபரை தமது மனுக்களில் பிரதிவாதியாக சேர்த்துள்ளமையையும் சுட்டிக்காட்டி தமது மனுக்கள் பூரணமானவையே என்று பதிலளித்தார்.

இதனைத் தொடர்ந்து, சட்டத்தரணி சரித்த குணரத்ன மற்றும் ஊடகவியலாளர் விக்டர் ஐவன் உள்ளிட்ட எண்மர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பிலும் விடயங்களை தெளிவுபடுத்தி வாதங்களை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் முன்வைத்தார்.

### ஜனநாயகம் இல்லை

அரசமைப்பின் 70 (1) உறுப்புரை பிரகாரம், நாடாளுமன்றத்தை ஒத்தி வைத்தல், கலைத்தல், மீள நாடாளுமன்றைக் கூட்டல் ஆகிய அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு உள்ளன. அதனை தன்னிச்சையாக அவர் செயற்படுத்த முடியாது. நாடாளுமன்றத்தின் கீழேயே நாட்டின் முழுமையான நிதிக் கட்டுப்பாடு உள்ளது. அது தொடர்பில் ஏனைய சட்டத்தரணிகள் விரிவாக கருத்துக்களை முன்வைப்பர். ஒரு நாட்டில் நாடாளுமன்றம் இயங்கவில்லை என்பது, அங்கு ஜனநாயகம் இல்லை என்பதையே வெளிக்காட்டும். நாடாளுமன்றம் என்பது எப்போதும் உயிரோட்டதுடன் இருக்கும் ஒரு இடம். அதனை கலைப்பது என்பதன் பொருள், அந்தச் சபைக்கு புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் என்பதாகும். மாற்றமாக நாடாளுமன்ற செயற்பாடுகளை முற்றாக நிறுத்துவது அதன் பொருளாகாது. பிரிட்டன் நாடாளுமன்ற முறைமையைக் கொண்டுள்ள எமக்கு அந்த சம்பிரதாயங்கள் இதனை மிகத் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றன.

முன் கூட்டியே ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்கும் போது ஒரே அறிவித்தலில் மூன்று விடயங்களை உள்ளீர்க்க வேண்டும். ஒன்று நாடாளுமன்றைக் கலைக்கும் திகதி, தேர்தலுக்கான திகதி, புதிய நாடாளுமன்றம் கூடும் திகதி என்பனவே அவை. அவை அனைத்தும் மூன்று மாதங்களுக்கு உட்பட்ட காலப்பகுதிக்குள் இருக்க வேண்டும்.

எவ்வாறாயினும் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ அதிகார காலம் முடிவடைய எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரை கால அவகாசம் இருந்தது.

எது எப்படியோ, ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்தின் அடிப்படையில் நாலரை வருடங்கள் பூர்தியானதும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டது. இவ்வாறான முன்கூட்டிய கலைப்பு, எவ்வாறு செய்யப்படல் வேண்டும் என அரசமைப்புத் தெளிவாக கூறியுள்ளது.

### எப்படிக் கலைக்கலாம்

அரசமைப்பின் 70 சரத்தின் 5 உறுப்புரையின் (அ) உப உறுப்புரை அது குறித்து பின்வருமாறு சுட்டிக்காட்டுகின்றது. '5 (அ) நாடாளுமன்றத்தைக் கலைக்கின்ற ஒரு பிரகடனம், நாடாளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான ஒரு திகதியை அல்லது திகதிகளை நிர்ணயித்தல் வேண்டும். அத்துடன் குறித்த பிரகடனத் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு பிற்படாத ஒரு திகதியில் கூடுமாறு புதிய நாடாளுமன்றத்தை அழைத்தலும் வேண்டும்.' 5 (இ) அ, ஆ வில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான பிரகடனம் ஒன்றின் ஊடாக நாடாளுமன்றின் முதலாவது கூட்டத்துக்கு என்று நிர்ணயிக்கப்பட்ட திகதியானது, பின்னரான பிரகடனம் ஒன்றின் மூலம் வேறுபடுத்தப்படலாம். எனினும் பின்னரான பிரகடனத்தின் மூலம் நிர்ணயிக்கப்படும் திகதியானது, அத்தகைய மூல பிரகடன திகதியில் இருந்து மூன்று மாதங்களுக்கு பின்னான ஒரு திகதியாக இருத்தல் வேண்டும்' என்று அந்த உறுப்புரைகளில் தெளிவாகக் கூறியுள்ளது. அப்படியானால், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் திகதியில் இருந்து மூன்று மாதங்களுக்குள் புதிய நாடாளுமன்றம் கூட்டப்படல் வேண்டும்.

### காலாவதி

இந் நிலையில் தான் கடந்த மார்ச் 2 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தல் ஏப்ரல் 25 ஆம் திகதி இடம்பெறும் எனவும் மீள நாடாளுமன்றம் மே மாதம் 14 ஆம் திகதி கூடும் எனவும் அது குறித்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த திகதிகள் அனைத்தும் தற்போது காலாவதியாகியுள்ளன. சட்டத்தின் முன் குறித்த வர்த்தமானி தற்போது வலுவிழந்தது. இதனை உறுதி செய்ய உயர் நீதிமன்றம் வரை வரத்தேவையும் இல்லை. எனினும் சிலர் அந்த ஆவணம் வலுவுள்ள ஆவணமாக கருதுவதால், உயர் நீதிமன்றின் உத்தரவொன்றைப் பெற வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அதன்படி தேர்தல்கள் ஆணைக்குழுவும் கடந்த மார்ச் 12 ஆம் திகதி முதல் வேட்பு மனுக்களையும் கோரி ஏற்றுக்கொண்டது.

தேர்தல் நடவடிக்கைகள் இடம்பெற்ற காலப்பகுதிக்குள் தான், அதாவது, கடந்த மார்ச் 11 ஆம் திகதி உலக சுகாதார நிறுவனம் கொரோனா வைரஸ் குடும்பத்தின் கொவிட் 19 வைரஸ் தொற்றை ஒரு உலகளாவிய தொற்றாக பிரகடனம் செய்தது. அந்த எச்சரிக்கையை கண்டுகொள்ளாமல் தொடர்ச்சியாக வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டன. அந் நடவடிக்கை மார்ச் 12 முதல் தொடர்ந்து மார்ச் 19 ஆம் திகதி நிறைவடைந்தது.

### நியாயமான தேர்தல் நடக்குமா?

இந்தக் காலப்பகுதிக்கு உட்பட்ட 15 ஆம் திகதி ஒரு ஞாயிறு தினம். 16 ஆம் திகதி திங்கட்கிழமை. அதனை பொதுவிடுமுறையாக விடுமுறைகள் சட்டத்தின் பிரகாரம் அறிவித்தனர். அதே சட்டத்தை பயன்படுத்தி, அடுத்து வந்த 17,18,19 ஆம் திகதிகளையும் பொது விடுமுறை தினமாக அறிவித்தனர். வேட்பு மனுதாக்கல் செய்ய வழங்கப்படும் 7 நாள்களில் 5 நாள்கள் விடுமுறை நாள்களாகும். 16 ஆம் திகதி திங்களன்று விடுமுறையால் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என கூறும் தேர்தல்கள் ஆணைக் குழு, 17,18,19 ஆம் திகதிகளில் ஏற்றுக்கொண்டுள்ளது. அப்படியானால் இங்கு எப்படி நீதியானதும் நியாயமானதுமான தேர்தலை எதிர்ப் பார்க்க முடியும்?

எல்லா வேட்பு மனுக்களையும் ஏற்றுக் கொண்ட பின்னர் ஆணைக்குழு சட்டமா அதிபரிடம், விடுமுறை தினம் குறித்து ஆலோசனை கோரியுள்ளது. சட்டமா அதிபரும் ஒரு சுருக்க கடிதத்தை பதிலாக அனுப்பியுள்ளார். எனினும் அதன் சட்ட ரீதியிலான தன்மை குறித்து விவாதிக்க வேண்டியுள்ளது. அவ்வாறான பின்னணியில் தற்போது தேர்தல் ஜூன் 20 ஆம் திகதி இடம்பெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு திகதி அறிவித்துள்ளது.

அரசமைப்பில் மிகத் தெளிவாக, தேர்தல், நாடாளுமன்ற புதிய கூட்டத்தொடர் மூன்று மாதங்களுக்குள் இடம்பெறவேண்டும் என கூறப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு ஜூன் 2 ஆம் திகதி மூன்று மாதங்கள் நிறைவடைகின்றன. அப்படியானால் எப்படி ஜூன் 20 ஆம் திகதியை தேர்தல் திகதியாக அறிவிக்க முடியும். தேர்தல்கள் ஆணைக்குழு, அரசமைப்பைக் கருத்தில் கொள்ளாது தேர்தல்கள் சட்டத்தை மட்டும் பார்த்து கண்மூடித்தனமாக முடிவெடுத்துள்ளது. அப்படியானால் ஜூன் 20 ஆம் திகதி தேர்தல் திகதியாக அறிவிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலும் சட்ட வலுவற்றது.

### அரசியல் நடவடிக்கை

இந்த முன் கூட்டிய தேர்தல் ஒரு அரசியல் செயற்பாடு மட்டுமே என்று தோன்றுகின்றது. கண்டிப்பாக இது ஒரு அரசியல் நடவடிக்கை. ஜனாதிபதி, தனது கட்சியின் வெற்றி, ஒரு குழுவின் வெற்றிக்காக இந்த அரசியல் தீர்மானத்தை எடுத்திருக்கின்றார். கொவிட் 19 அச்சுறுத்தல் இருந்தும் கூட இவ்வாறான தொரு முடிவுக்கு அவர் சென்றமை அதனையே உணர்த்துகின்றது. தற்போதைய சூழலில், ஜூன் 20 ஆம் திகதி தேர்தல் கூட சாத்தியமற்றதாகவே தோன்றுகின்றது. தேர்தல் திகதியைக் கேட்டால் தேர்தல்கள் ஆணைக் குழு, அதனை கொவிட் 19 தீர்மானிக்கும் என்று பிரசித்தமாகவே பதிலளித்துள்ளனர்.

அப்படியானால் கண்டிப்பாக கொவிட் 19 காரணமாக பெரிய உயிர் அச்சுறுத்தல் உள்ளது. இந்தச் சூழலில், தேர்தலை நடத்தினால் எமது தேர்தல் சட்டவிதிகளின்படி, செயற்பட்டால் தொற்று பரவலுக்கான சந்தர்ப்பம் அதிகமாகவே இருக்கும். மக்களின் ஜனநாயக உரிமை மதிக்கப்படல் வேண்டும். தேர்தல் வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. எனினும், எல்லா உரிமைகளையும் விட உயிர் வாழும் உரிமையே முதன்மை உரிமை. தற்போதைய சூழலில் தேர்தல் எமது சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடாத்த முடியுமா? அதனை தான் சிந்திக்க வேண்டும்.

சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளுடன் நடாத்துவதாயின் சட்ட திட்டங்களில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும். அதற்கு நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டும். குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மக்களின் உயிர்களுடன் விளையாடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது தொடர்பில் ஜனாதிபதி மார்ச் 2 ஆம் திகதி வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் தற்போது வலுவிழந்த வெற்று ஆவணம். நாடாளுமன்றம் என்பது எப்பொழுதும் உயிர்ப்புள்ள ஒரு நிறுவனம். மூன்று மாதங்களுக்கு மேல் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடாத்தப்படாமல் நாடு இயங்க முடியாது. அரசமைப்பின் 6 ஆம் திருத்தச் சட்டத்தை மையப்படுத்திய விஸ்வநாதன் எதிர் லியனகே எனும் மனு தொடர்பில் உயர் நீதிமன்றின் நிலைப்பாட்டை இங்கு ஞாபகப் படுத்துகின்றேன். நீதிமன்ற கட்டமைப்பை அதனூடாக எவ்வாறு உயர் நீதிமன்றம் பாதுகாத்ததோ, அதே போல் நாடாளுமன்றத்தையும் காக்கும் பொறுப்பு இம்மன்றுக்கு உள்ளது என்பதை கூறுகின்றேன், என தனது வாதத்தை நிறைவு செய்தார். (ஒ.5)

# நிச்சயம் நீதி நிலைநாட்டப்படும் நம்பிக்கையிழக்க வேண்டாம்

## கோருகிறார் ஜஸ்மின் சூக்கா



**கொழும்பு, மே 20**

**போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி நிலைநாட்ட காலதாமதம் ஏற்பட்டாலும், மக்கள் நம்பிக்கையை இழக்காமல் இருக்க வேண்டும் என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்று இயக்குநர் ஜஸ்மின் சூக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 11ஆவது ஆண்டு நினைவஞ்சலியை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள காணொலி அறிவிப்பிலேயே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இறுதிப் போரின்போது உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தியதாகவும், பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மோதல் முடிவுக்கு வந்து பல வருடங்கள் கடந்தும், இறுதிப்போரின் போது எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என்பதை உறுதியாகக் கூற முடியாதுள்ளமை, கொடுமையான விடயம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசும் அதிகாரிகளும் தங்களிடம் சரணடைந்தவர்கள் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டமைக்கும் தங்களுக்கும் எந்தவித தொடர்புமில்லை என தொடர்ந்தும் மறுத்துவருகின்றனர்.

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு வெறுமனே உயிர்தப்பியவர்களின் ஆவணங்களை பதிவுசெய்வதை மாத்திரம் மேற்கொள்ளவில்லை. மாறாக போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கான ஆதாரங்கள் தடயங்களை சேகரித்து ஆவணப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக ஒரு நாள் அவற்றிற்கு காரணமானவர்களை நாங்கள் பொறுப்புக்கூறச் செய்யலாம் என்றும் கடந்த ஐந்து வருடங்களாக நாங்கள் எங்களிடமுள்ள ஆவணங்களை பயன்படுத்தி கொலைகளுக்கு காரணமானவர்களின் பெயர்களை பகிரங்கப்படுத்தி வருகின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சாத்தியமான சூழ்நிலைகளின்போது அவர்களுக்கு எதிராக சர்வதேச நியாயாதிக்க எல்லைக்குள் நீதிமன்ற நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம் என்பதையும் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 1000 நாள்களைக் கடந்த நிலையிலும் மேற்கொள்ளப்படும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் ஆர்ப்பாட்டம் தொடர்பாக தாங்கள் கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர், இந்த காணொலியில் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இலங்கை ஜனாதிபதியாக கோத்தாபய பதவியேற்ற பின்னர், அவர் முக்கிய பதவிகளுக்கு போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்படும் இராணுவ அதிகாரிகளை நியமித்துள்ளமையை தாங்கள் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ,5)

---

## கூட்டுறவு பணியாளருக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மே 20

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த காலத்தில் மக்களுக்கான அத்தியாவசிய சேவை மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட பணியாளர்களுக்கு அனேகமான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றன.

கூட்டுறவுச் சங்கங்களின் நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்களுக்கு இந்த மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டும் வருகின்றன. ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் கிளை நிலையங்கள் திறக்கப்பட்டு அத்தியாவசிய சேவைகள் இடம்பெற்றன.

இவ்வாறு அத்தியாவசிய பணிகளை மேற்கொண்டிருந்த பணியாளர்களுக்கு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாக கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவித்தன.

இதே வேளை கடந்த மார்ச் ஏப்ரல் மாதங்களில் இலாபத்தில் செயற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அந்த மாதங்களுக்கான வாழ்க்கைச் செலவுப் படிகளையும் பணியாளர்களுக்கு வழங்குகின்றன என்று

---

## ஹிஜாஸ் மீதான மனு ஜூனில் பரிசீலனைக்கு

கொழும்பு,மே 20

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வைக் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளமை ஊடாக அவரது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது. அதனால் அவரை விடுவிக்க உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

உயர் நீதிமன்ற நீதியர்சர்களான எல்.டி.பி.தெஹிதெனிய, ப்ரீத்தி பத்மன் சுரசேன மற்றும் காமினி அமரசேகர ஆகியோர் அடங்கிய மூவர் கொண்ட நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று முன்தினம் ஆராயப்பட்டபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை உடனடியாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு கோரி, அவரின் உறவினர்களால் ஏற்கனவே இரண்டு ஆட்கொணர்வு மனுக்கள் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க)

---

## நகர சபை அமர்வில் அஞ்சலி

சாவகச்சேரி,மே 20

சாவகச்சேரி நகரசபை அமர்வில், முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் சாவடைந்தோர் மற்றும் கொரோனா தொற்று காரணமாக பலியானோர் ஆகியோருக்கு நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

நகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சபை உறுப்பினர் அஞ்சலியைச் செலுத்தினர். (க-9)

---



## மிருகங்களின் கழிவுகள் கொட்டுவதற்கு எதிர்ப்பு

### மக்கள் ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு,மே 20

மட்டக்களப்பு ஏறாவூர் நகர சபையால் சேகரிக்கப்படும் மிருகங்களின் எச்சங்களை, ஏறாவூர் ஐந்து எல்லைப்பகுதியில் கொட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்தப் பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கழிவுகளால் செங்கலடி செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஏறாவூர் 5, சேனைக்குடியிருப்பு, குமார வேலியார் கிராமம், அம்மன்புரம் போன்ற பகுதிகளில் உள்ள பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏறாவூர் நரசபைக்கு உட்பட்ட முஸ்லிம் பிரதேசங்களில் இருந்து கொண்டுவரப்படும் மிருகங்களின் எச்சங்கள் குறித்த பகுதியில் கொட்டப்படுகின்றன. இதனால் துர்நாற்றம் வீசுவதுடன், கொசுக்களின் தொல்லை அதிகம் , பாடசாலைகளில் கல்வி கற்க முடியாத நிலைமை, அருகிலுள்ள ஆலயம், கிணறுகள் மற்றும் வீடுகளில் காகங்கள் எச்சங்களைப் போடுதல் உள்ளிட்ட அசௌகரியங்கள் ஏற்படுகின்றன என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

குறித்த இடத்துக்கு நகர சபை தவிசாளர் அப்துல் வாஸித் வருகை தந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ச.வியாழேந்திரன் மற்றும் மக்களுடன் கலந்துரையாடினர். உரிய நடவடிக்கையெடுப்பதாக உறுதியளித்ததையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (க-150)

---

## மன்னார்– மாத்தளன் மீனவரிடையே முறுகல்

முல்லைத்தீவு, மே 20

முல்லைத்தீவு சாலைப் பகுதியில் கடலட்டைத் தொழில் செய்வதற்காக மன்னாரில் இருந்து சென்ற மீனவர்களை உள்நுழைய விடாது, மாத்தளன் பகுதி மீனவர்கள் வழிமறித்துத் திருப்பி அனுப்பினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடந்துள்ளது. நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மாவட்டங்களில் இருந்து மாவட்டங்கள் செல்வதற்கு பல்வேறு கெடுபிடிகளை அரச திணைக்களங்கள் மேற்கொண்டு வரும் நிலையில், மன்னார் மாவட்டத்தில் இருந்து மீனவர்கள், முல்லைத்தீவு மாவட்டம் சாலைக் கடற்பரப்பில் கடலட்டைத்தொழில் செய்வதற்காக இரண்டு வாகனங்களில் 4 படகுகளை ஏற்றிச் சென்றுள்ளனர்.

மாத்தளன் சந்தியில் வைத்து பிரதேச மீனவர்கள் அவர்களை மறித்து அவர்களை அங்கு செல்லவிடாது தடுத்தனர். இதனால் மீனவர்களுக்கு இடையில் முறுகல் ஏற்பட்டது. முல்லைத்தீவு பொலிஸார் மற்றும் படையினர் பிரசன்னமாகி பிரச்சினையை சுமூகமாக்க முயற்சித்த போதும், மன்னார் மீனவர்களை உட்செல்ல மாத்தளன் மீனவர்கள் அனுமதிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேச செயலகத்தால் வழங்கப்படும் “கொட்டுப் போமிட்” எனப்படும் அனுமதி இல்லாததாலும், கரையோரத்தில் அட்டை பிடிப்பதற்காக கரையோர மீனவ அமைப்புக்கள் ஒத்துழைப்பு வழங்காததாலும், சட்ட அனுமதிகளுடன் தொழிலுக்கு வருமாறு மாத்தளன் மீனவர்கள், மன்னார் மீனவர்களுக்குத் தெரிவித்தனர். (க-19)



# அரச நிறுவனங்கள் அரசியல் செய்ய வேண்டியதில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு



**கொழும்பு, மே 20**

**அரச நிறுவனங்கள் அரசியல் செய்ய வேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. செய்ய வேண்டியது நிறுவனங்களை முன்னேற்றுவதாகும். அதற்காக வருமானம் ஈட்டவேண்டும். வினைத்திறனையும் உற்பத்தித்திறனையும் அதிகரிக்க வேண்டும். செலவுகளையும் வீண்விரயத்தையும் கட்டுப்படுத்த வேண்டும்.**

வியர்வை சிந்தி கஷ்டப்பட்டு உழைக்கும் மக்கள் சம்பாதிக்கும் வருமானத்தின் மூலமே அரச நிறுவனங்கள் இயங்குகின்றன. எனவே நிறுவனங்கள் மக்களுக்கு சுமையாக இருக்கக் கூடாது என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவர்களுடன் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார் என்று அவரது ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:

சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகள் பொதுமக்கள் நலன் பேணல் சேவைகள் என்பதால் வருமானம் ஈட்டுவதை அவற்றிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. ஏனைய நிறுவனங்கள் தமது பராமரிப்பு மற்றும் ஊழியர் மேம்பாட்டுக்குத் தேவையான வருமானங்களைத் தாமே ஈட்டிக்கொள்ள வேண்டும். கொரோனா நோய்த் தொற்று பரவல் காரணமாக உலகின் ஏனைய நாடுகளைப் போன்று இலங்கையிலும் பொருளாதாரத்திற்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இலட்சக்கணக்கான தொழில்கள் இழக்கப்பட்டுள்ளன. நிறுவனத் தலைவர்கள் நாட்டைப் பற்றி சிந்தித்துச் செயற்பட வேண்டும். அவ்வாறில்லாதபோது நிறுவனங்கள் வீழ்ச்சியடையவும் முடியும். இந்தப் பிரச்சினையை வெற்றிகொள்வதற்கு மட்டுமன்றி எதிர்காலப் பொருளாதார அபிவிருத்திக்காகவும் அரச நிறுவனங்களைத் திட்டமிட்ட வகையில் பலப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்- என்றுள்ளது. (ஐ)





## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

கிளிநொச்சி,மே 20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி அலுவலகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தலைமையில் நடைபெற்றது.

பிரதான சுடர் ஏற்றப்பட்டதை அடுத்து நினைவு சுடர்களும் ஏற்றப்பட்டன. தொடர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், மலர் வணக்கமும் இடம்பெற்றது.

நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன்,பிரதேச சபை உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-214)

## தொங்கிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம்

யாழ்ப்பாணம்.மே 20

முகநூலில் பரப்பட்ட போலியான தகவலால் குடும்பஸ்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டார்.


நாவற்குழி பாலத்துக்கு அருகாமையில் உள்ள வெற்றுக் காணியில், மரத்தில் தொங்கிய நிலையில் அவரது சடலம் நேற்று மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த இராசதீபன் (வயது -29) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திருமணமாகி ஒரு குழந்தையின் தந்தையான இவருக்கு வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு இருப்பதாக, போலி முகநூல் கணக்கில் பதிவு செய்யப்பட்டதை அடுத்து ஏற்பட்ட மனவிரக்தியில் உயிரை மாய்த்துக் கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் வேலைக்குச் சென்றவர் வீடு திரும்பாத நிலையில், நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (க-7,105,106)



## வாகன விபத்தில் இருவர் காயம்

கிளிநொச்சி,மே 20

வாகன விபத்தில் இருவர் காயமடைந்தனர். அவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து பூநகரி மட்டுவில் நாடு பகுதியில் நேற்று நடந்துள்ளது.

ஒரே திசையில் டிப்பர் மற்றும் மோட்டார் சைக்கிள் பயணித்துள்ளன. மோட்டார் சைக்கிள் முன்பாகவும், டிப்பர் வாகனம் பின்புறமாகவும் சென்றவேளை, மோட்டார் சைக்கிளில் சென்றவர் வலது பக்கம் திரும்பும் போது, சமிக்ஞை ஒளியை ஒளிரவிடாது திருப்பியுள்ளார். இதனால் சடுதியாகச் செயற்பட்ட டிப்பரின் சாரதி விபத்தைக் கட்டுப்படுத்த முற்பட்ட போது டிப்பர் தடம் புரண்டுள்ளது.

விபத்தில் பாதசாரியாக நின்ற ஒருவர் மற்றும் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் காயமடைந்தனர். இருவரும் பூநகரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டனர். (க-6)





முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு பச்சிலைப்பள்ளி பிரதேச தமிழரசுக் கட்சியினரால் நேற்று முன்தினம் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபைத் தவிசாளர் சுரேன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உயிர்நீத்த உறவுகளுக்காக அகவணக்கம் செலுத்தப்பட்டு, சுடர் ஏற்றி மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ-6)



## குளவிகள் தாக்கி தம்பதி காயம்

சாவகச்சேரி, மே 20

பனையோலைக்குள்ளிருந்து வெளிவந்த கருங்குளவிகள், தம்பதியை சரமாரியாக தாங்கின.

இந்தச் சம்பவம் மிருசுவில் பழையவாய்க்கால் பகுதியில் நேற்று நடந்துள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான தம்பதி சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்படுள்ளனர். (க-9)



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு சமத்துவக் கட்சியின் கிளிநொச்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. நிகழ்வில் முன்னாள் போராளிகள், பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-214)

# யாழ். நகரில் இருவருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், மே 20

யாழ்.மாநகர பிரதேசத்தில் கடந்த வாரத்தில் மட்டும் இருவர் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புத்துறை விபுலானந்தர் வீதியிலும், பாண்டியன்தாழ்வு சந்தனமாதா கோவில் வீதியில் மற்றொருவருமாக இருவர் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்கின் தாக்கம் காணப்படும் இந்தப் பகுதியில் அதற்கான கட்டுப்பாடுகள் மற்றும் புகைஅடிக்கும்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மாநகர பிரதேசத்தில் இதன் தாக்கம் குறைவாகக் காணப்பட்டாலும் திடீரென இருவர் டெங்கின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ப-17)

# அமைச்சின் செயலாளர்கள் நியமனங்களில் முறைகேடு

## ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு,மே 20

பொதுத்தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக,தேசிய மக்கள் சக்தி, சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் சட்டத்தரணிகளான உபுல் குமரப்பெரும, ஹர்ஷன நாணக்கார மற்றும் அமைச்சின் முன்னாள் செயலாளரான ஆஷோக பீரிஸ் ஆகியோர் முறைப்பாட்டை வழங்கியுள்ளனர். தேர்தல் நெருங்கும் போது அரச நியமனங்களை வழங்குதல், பதவி உயர்வுகளை வழங்குதல் என்பன முன்னெடுக்கப்படக்கூடாது என்று சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரால் சுற்றறிக்கை வெளியிடப்படும்.

அதற்கேற்ப இம்முறை நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் தேர்தல்கள் ஆணையாளரால் அவ்வாறான சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. சுற்றறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னரும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவினால் 7 அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அந்த நியமனம் குறித்த சுற்றறிக்கைக்கு முரணானதாகும்.

எனவே தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு முரணாக முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கை தொடர்பில் ஆணைக்குழு கவனம் செலுத்துவதோடு, அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையாளரிடம் வலியுறுத்தியுள்ளோம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (க)

# தவிசாளருக்கு கட்சியின் நிரந்தர உறுப்புரிமை

யாழ்ப்பாணம், மே 20

காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் வி.கேதீஸ்வரதாஸ் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நிரந்தர உறுப்புரிமையை உத்தியோகபூர்வமாகப் பெற்றுக்கொண்டுள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட தலைவரும் பொருளாளருமான பெ.கனகசபாபதி மற்றும் கட்சியின் நிர்வாகச்செயலாளர் சு.சே.குலநாயகம் ஆகியோர் தலைமையில் உத்தியோகபூர்வமாக தாம் இணைந்து கொண்டதாக தவிசாளர் வி. கேதீஸ்வரதாஸ் .தெரிவித்தார். (ஜ-50)

# ஆசிரியர்களிடம் மதிப்பாய்வு

கொழும்பு,மே 20

கல்வி அமைச்சு, அரச பாடசாலைகளில் சேவைபுரியும் ஆசிரியர்கள் தங்களுக்கு மிகவும் விருப்பமான இடம் மற்றும் படிப்பிக்க பொருத்தமான பாடம் தொடர்பாக தேடிப்பார்க்க மதிப்பாய்வை நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

அதற்காக கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ வலைத்தளமான https//moe. gov. lk யில் Teacher survey form ஆசிரியர் மதிப்பாய்வு எனக் குறிப்பிட்ட நீடிப்பில் அல்லது https//nemis. moe.gov. lk ஊடாக உள்நுழையமுடியும்.

அதிலுள்ள அறிவுரைக்கு அமைவாக எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் வினாக்கொத்தைப் பூர்த்தி செய்யவேண்டும் என்று கல்வி அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (க)

# வெளிநாட்டு கப்பல் துறைகளின் வெற்றிடங்களுக்கு இலங்கையர்

## ஜனாதிபதி கோத்தாபய ஆராய்வு

கொழும்பு. மே 20

கொவிட் 19 நோய்த்தொற்றுடன் உலகின் முன்னணி நாடுகள் பலவற்றின் கப்பல் துறை கம்பனிகளில் ஏற்பட்டுள்ள ஊழியர் வெற்றிடங்களுக்கு இலங்கையர்களை அனுப்பக்கூடியவாய்ப்பு குறித்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கவனம் செலுத்தியுள்ளார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகப்பிரிவால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது

தெற்கு கடல் மார்க்கமாக கிழக்குக்கும் மேற்கிற்கும் பயணம் செய்யும் உலக நாடுகளின் கப்பல்களில் சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களுக்கு காலி துறைமுகத்தின் ஊடாக நாட்டிற்குள் பிரவேசிக்கவும் அங்கிருந்து வெளிச்செல்லவுமான வாய்ப்புகள் குறித்தும் ஆராயப்பட்டது. நாட்டின் முக்கிய கப்பல்துறை நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த விடயங்கள் தொடர்பாகக் கருத்துக்களை பரிமாறிக் கொண்டார்.

காலித் துறைமுகத்தக்கு 10 கடல் மைல் தூரத்தில் உள்ள கடற்பரப்பில் 300க்கும் மேற்பட்ட வணிகக் கப்பல்கள் தினமும் பயணிப்பதாக நிறுவனங்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். அக்கப்பல்களில் சேவையில் ஈடுபட்டுள்ள ஏனைய நாடுகளின் பணிக்குழாமினருக்கும் இலங்கையிலிருந்து தமது நாடுகளுக்குப் பயணம் செய்யும் வசதிகளை செய்துகொடுப்பதன் மூலம் பெருமளவு அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. ஸ்ரீலங்கன் விமானச் சேவையை மேம்படுத்தவும் இதனை பயன்படுத்திக் கொள்ளமுடியும் என ஜனாதிபதி தெரிவித்தார். காலித் துறைமுகத்தை சர்வதேச கப்பல் பணிக்குழாம் பரிமாற்ற மையமாக அபிவிருத்தி செய்யக்கூடிய வாய்ப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்டது. சுகாதாரச் சட்ட திட்டங்களுக்கு அமைய இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய வாய்ப்புத் தொடர்பாக ஆராயுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். என்றுள்ளது. (ப)

# சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசால் இழப்பீடு

மன்னார்,மே 20

மன்னாரில் மினி சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசால் இழப்பீடுகள் வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, மாவட்ட இடர் சேவைகள் முகாமைத்துவ நிலையம் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மன்னாரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரு சில மணி நேரம் இடம்பெற்ற மினி சூறாவளியால், மன்னார் மாவட்டத்திலுள்ள 5 பிரதேச செயலக பிரிவுகளிலும் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

மாவட்ட இடர் முகாமைத்துவ சேவைகள் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி மன்னார் மாவட்டத்தில் 141 குடும்பங்களைச் சேர்ந்த 522 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் மன்னார் நகர் பிரதேச செயலக பிரிவில் 65 குடும்பங்களைச் சேர்ந்த 250 நபர்களும், நானாட்டான் பிரிவில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 69 நபர்களும், மாந்தை மேற்கு பிரிவில் 13 குடும்பங்களைச் சேர்ந்த 43 நபர்களும், முசலி பிரிவில் 29 குடும்பங்களைச் சேர்ந்த 93 நபர்களும், மடு பிரதேச செயலக பிரிவில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 67 நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நானாட்டானில் 2 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. மன்னார் நகர் பிரதேச செயலக பிரிவில் 53 வீடுகளும், நானாட்டான் பகுதியில் 15 வீடுகளும், மாந்தை மேற்கில் 7 வீடுகளும், முசலி பிரிவில் 24 வீடுகளும் , மடு பிரதேச செயலக பிரிவில் 8 வீடுகளும் என 107 வீடுகள் பகுதியாக சேதமடைந்துள்ளன.

மன்னார் நகர் பிரிவில் 13, நானாட்டான் பிரிவில் 7, மாந்தை மேற்குப் பிரிவில் 1 மற்றும் முசலி பிரிவில் 5 என 26 வர்த்தக நிலையங்கள் சேதமடைந்துள்ளன.

பாதிப்படைந்தவர்களின் நிலைமைகளை நேரில் பார்வையிட்டு அதன் அடிப்படையில் அரசால் வழங்கப்படும் இழப்பீடுகள் வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-60)

# சிறுபோக நெற்செய்கையை திட்டமிட்டபடி ஆரம்பிக்குக!

## மன். மாவட்டச் செயலர் மோகன்றாஸ் கோரிக்கை

மன்னார், மே 20

மன்னார் மாவட்டத்தின் பிரதான குளமாகிய கட்டுக்கரைக்குளத்தின் நீர் மட்டம் அதிகரித்து வருகின்றபோதும், ஏக்கர்களை அதிகரிக்காது முதலில் திட்டமிட்டவாறு சிறுபோக நெற்செய்கையை உடன் ஆரம்பிக்குமாறு மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தின் பிரதான குளமாகிய கட்டுக்கரைக்குளத்தில் நீர் மட்டம் 7 அடியாக இருந்தபொழுது ஆயிரத்து 250 ஏக்கரில் சிறுபோகம் செய்வதற்கான தீர்மானம் கடந்த சிறுபோக நெற்செய்கை சம்பந்தமான கூட்டத்தில் எடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்பொழுது மன்னார் கட்டுக்கரைக்குளத்துக்கு அனுராதபுரத்திலிருந்து வரும் வரத்து நீர் அதிகரித்துள்ளதால் கட்டுக்கரைக்குளத்தில் நீர்மட்டம் 9 அடியாக உயர்ந்துள்ளது. இதனால் சிறுபோக நெற்செய்கையை மேலும் 400 ஏக்கராக அதிகரிக்க கோரி மன்னார் கட்டுக்கரைக்குளத்தின் வாய்க்கால் அமைப்பு மன்னார் மாவட்டச் செயலரை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியது. இதன்போதே மாவட்டச் செயலர், ஏற்கனவே திட்டமிட்டபடி விவசாயத்தை மேற்கொள்ளுமாறு தெரிவித்தார். (ம-60)

# அம்பாறையில் கரும்பு அறுவடை

அம்பாறை,மே 20

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக முடக்கப்பட்டிருந்த கரும்பு அறுவடை, அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் ஹிங்குறாணை சீனித் தொழிற்சாலைக்குரிய கரும்பு பயிரிடப்படும் சில இடங்களில் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அறுவடை செய்யப்பட்ட கரும்புகள் சீனி உற்பத்திக்காக ஹிங்குராணை சீனித் தொழிற்சாலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. இதனால் கூலித் தொழிலாளர்களும், கரும்புச் செய்கையாளர்களும் வருமானம் ஈட்டத் தொடங்கியுள்ளனர். (க)



# நியாயப்படுத்திக் கூறுங்கள் கொச்சைப்படுத்தக் கூடாது

## சுமந்திரனிடம் வலியுறுத்து

**மட்டக்களப்பு, மே 20**

**ஆயுதப்போராட்டம் நியாயமானது என்பதை சிங்களப் படைகளால் படுகொலை செய்யப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.ரவிராஜ் தெளிவான முறையில் சிங்கள மக்களுக்கு முன்னர் விளங்கப்படுத்தியிருக்கின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராக இருக்கின்ற சுமந்திரன் ஆயுதப் போராட்டத்தை சிங்கள மக்கள் மத்தியில் நியாயப்படுத்த வேண்டுமே தவிர கொச்சைப்படுத்தக்கூடாது.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் முக்கியஸ்தருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்டது.



அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சிங்கள மக்கள் மத்தியில் எமது ஆயுதப் போராட்டத்தையும், தமிழ் மக்களின் உரிமைகளையும் நியாயப்படுத்த வேண்டுமே தவிர ஆயுதப்போராட்டம் பிழையானது என்று கூறக்கூடாது.

மனிதப் படுகொலை எவராலும் மறக்க முடியாதது. எமது வருங்கால சந்ததிகூட இந்த அவலத்தை வருடந்தோறும் நினைவுகூர வேண்டும்.

எமது விடுதலைப் போராட்டம் முப்பது வருடங்களுக்கும் மேலாக நடைபெற்று 2009ஆம் ஆண்டு மே மாதம் மௌனிக்கச் செய்யப்பட்டது.. இருந்தும் நாங்கள் விடுதலை அடையவில்லை. எமது மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கவில்லை.

எதிர்வரும் காலங்களில் எமது மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழக்கூடிய ஒரு நிலையை நாங்கள் ஏற்படுத்த வேண்டும். அதற்காக நாங்கள் ஜனநாயக ரீதியாகப் போராடவேண்டியதொரு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

உண்மையில் இந்த ஆயுதப் போராட்டம் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நடைபெற்றது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த நாடு சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்பட்டதன் விளைவாக முப்பது வருடங்களுக்கும் மேலாக தமிழ்த் தலைவர்கள் அகிம்சை ரீதியாக போராடி உண்ணாவிரதமிருந்து, ஊர்வலங்களை நடத்தி, அடிவாங்கி எத்தனையோ இனக்கலவரங்களைச் சந்தித்து பல உயிரிழப்புகள், பொருள் இழப்புகளுக்குப் பின்பு ஆயுதப் போராட்டம் தான் ஒரே வழி என்ற காரணத்தால் நாங்களாக விரும்பி ஏற்றுக்கொள்ளாமல் இந்த ஆயுதப் போராட்டம் எங்கள் மீது திணிக்கப்பட்டது- என்றார். (த)

### 60 வயதுக்கு மேற்பட்ட 500 கைதிகளை விடுவிக்கக் கோரிக்கை

20 ஆண்டுகளுக்கு மேல் சிறைவாசம் அனுபவித்த 60 வயதுக்கும் மேற்பட்ட கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. 60 வயதுக்கு மேற்பட்ட சுமார் 500 கைதிகள் சிறைச்சாலைகளில் உள்ளனர். அவர்களில் கொலை, பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகம், திருட்டு மற்றும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களும் உள்ளனர் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பந்துல ஜயசிங்க தெரிவித்தார். (த)

# டெங்கு அறிகுறிகளும் தடுப்பு முறைகளும்

டெங்கு நோய்க்கான அறிகுறிகள் மற்றும் அவற்றைத் தடுப்பது எவ்வாறு என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

காய்ச்சல் 38 பாகை செல்சியஸுக்கு மேல் இரண்டு தொடக்கம் ஏழு நாள்கள் நீடிக்கும்.

கடுமையான தலைவலி, கண்களுக்குப் பின்னால் வலி, வயிற்றுப் பிரட்டல் மற்றும் வாந்தி, உடலில் சிவப்பு நிற அடையாளம், தசை மற்றும் மூட்டுவலி ஆகியனவற்றில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நோய் அறிகுறிகள் காணப்படின் உடனடியாக மருத்துவரை நாடவும்.

நுளம்பு கடிப்பதைத் தடுக்க மென்னிற ஆடைகள், நீள கையுள்ள சட்டைகள் மற்றும் நீளக் காற்சட்டை என்பனவற்றை அணியவும்.

ஜன்னல்களுக்கும், கதவுகளுக்கும் திரையிடல் வேண்டும்.

பூச்சி கொல்லி பதிவாளரால் அங்கீகரிக்கப்பட்ட நுளம்பு விரட்டிகளைப் பயன்படுத்தவும்.

பகல் மற்றும் படுக்கை நேரத்தில் நுளம்பு வலைகளைப் பயன்படுத்தவும் என்று அறிகுறி மற்றும் தடுப்பு வழிகளை உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ளது. (த-159)

# நுளம்பு பெருகும் இடங்களை தடுத்து நிறுத்துவது எப்படி?

## உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தல்

கொழும்பு, மே 20

உங்கள் வீட்டையும், வீட்டைச் சுற்றியுள்ள நுளம்பு பெருகும் இடங்களையும் எவ்வாறு தடுப்பது என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

நுளம்புகளைத் தடுக்க அனைத்து தொட்டிகளும் தண்ணீர் சேகரிக்கும் கொள்கலன்களும் மூடப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

வடிகால்கள், பூச்சாடிகள், செல்லப்பிராணிகளுக்கு உணவு வைக்கும் பாத்திரங்கள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிக்கு வெளிப்புறத்தே தண்ணீர் தேங்கும் சிறு பகுதிகள் என்பனவற்றைத் தவறாமல் ஒழுங்காகச் சுத்தம் செய்து துலக்குங்கள்.

அப்புறப்படுத்த முடியாத தாங்கிகளைக் கவிழ்த்து விடவும். அத்துடன் அவற்றை மழையிலிருந்து பாதுகாக்கவும் (உதாரணமாக வண்டிச் சக்கரங்கள், பீப்பாய் கள், ரயர்கள்)

வாரத்துக்கு ஒரு முறையாவது பூச்சாடிகளில் உள்ள தண்ணீரை மாற்றவும். பயன்படுத்தப்பட்ட நீரை நிலத்தில் ஊற்றி வெளியேற்றவும்.

தண்ணீரைத் தேக்கி வைக்கக் கூடிய அல்லது நுளம்பு பெருகும் இடங்களாக தொழிற்படக் கூடிய பாவனையற்ற கொள்கலன்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுங்கள்.

அனைத்து வடிகால்களையும், பள்ளங்களையும் தவறாமல் ஒழுங்காகச் சுத்தம் செய்யவும்.

ஆழமற்ற கிணறுகளை நுளம்பு வலையால் மூடுங்கள்.

டெங்கிலிருந்து பாதுகாப்போம் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. (த-159)

### *1000....*

னர். இதன்படி தொற்றுக்குள்ளாகியவர்களின் மொத்த எண்ணிக்கை 992 இலிருந்து 1023 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுப் புதிதாக அடையாளம் காணப்பட்ட 29 பேரில் 18 பேரும் அம்பாறை மாவட்டம், ஒலுவில் துறைமுகப் பகுதியில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார். மற்றையவர் பற்றிய விவரம் குறிப்பிடப்படவில்லை.

இதேவேளை, தொற்றுக்குள்ளாகியவர்களில் மேலும் 10 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய தொற்றிலிருந்து முழுமையாக குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 559 இலிருந்து 569 ஆக உயர்ந்து ள்ளது.

இதுவரை தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களில் 9 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது 442 நோயாளிகள் 08 மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு மருத்துவமனையில் 95 பேரும், பொலனறுவை வெலிகந்தை ஆதார மருத்துவமனையில் 39 பேரும், கொழும்பு கிழக்கு முல்லேரியா ஆதார மருத்துவமனையில் 56 பேரும், சிலாபம் இரணவில மருத்துவமனையில் 05 பேரும், மட்டக்களப்பு காத்தான்குடி ஆதார மருத்துவமனையில் 29 பேரும், வெலிசறையிலுள்ள கடற்படை பொது மருத்துவமனையில் 156 பேரும், ஹோமாகம ஆதார மருத்துவமனையில் 14 பேரும், மினுவான்கொடை ஆதார மருத்துவமனையில் 48 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனிடையே மேலும் 135 பேர் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் 23 மருத்துவமனைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் இதுவரை அடையாளம் காணப்பட்ட 1021பேரில் 578 பேர் கடற்படையினர். இவர்களில் 209 பேர் இதுவரை குணமடைந்துள்ளனர். ஏனையோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று ராணுவத் தளபதி தெரிவித்தார். (த22)

### *வாய்க்குள்...*

றைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு வல்வெட்டித்துறையில் இடம்பெற்றது. தமக்குக் கிடைத்த தகவலின்படி அங்குசென்று சந்தேகநபரைக் கைதுசெய்ய முற்பட்டபோதே அவர் இரண்டு 2 கிராம் நிறையுடைய ஹெரோய்ன் போதைப்பொருள் பைக்கற்றுக்களை விழுங்கினார். அதை மீட்கும்முயற்சியில் ஒரு பைக்கற் மீட்கப்பட்டது. அதன்போது சந்தேகநபர் பொலிஸ் அலுவலரின் கைவிரலைக் கடித்து விட்டார் என்றும் சந்தேகநபர் விசாரணையில் உள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதவிர, உடுப்பிட்டியில் நேற்று ஒரு கிராமுக்கு மேற்பட்ட நிறையுடைய ஹெரோய்ன் போதைப் பொருள் பைக்கற்றுக்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அதே இடத்தைச் சேர்ந்தவரே கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த26)

### *நாட்டை விட்டு...*

தான நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த சூறாவளி இன்றுபிற்பகல் வங்காள தேசத்தின் மேற்கு கரையை அண்மிக்குமென்று எதிர்பார்க்கப்படு கின்றது.

இதன்போது இலங்கையைச் சூழவுள்ள கடல் கொந்தளிப்பாகக் காணப்படும். பலத்த காற்றும் வீசும். கடல்சார் தொழிலாளர்கள் மறுஅறிவித்தல்வரை கடலுக்குச் செல்லவேண்டாம் என்று நிலைய அதிகாரி மொஹம்மட் சாலிஹின் தெரிவித்தார். (த)

### *மீசாலை...*

பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. மீசாலை வடக்கிலுள்ள பூதவராயர் கோவிலிலேயே நேற்றுமுன்தினம் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மூலஸ்தானத்திலிருந்த ஐம்பொன் கலசம், பாத்திரங்கள், குத்துவிளக்குகள், விலையுயர்ந்த புடைவைகள், பணம் என்பன திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணை தொடர்கின்றது என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (த159)

# நூறாவது பிறந்த நாளும் நினைவஞ்சலியும்



பிறப்பு 20.05.1920 இறப்பு 16.12.2006

## திரு. சி. கனகசபாபதி

"கேடில் விழுச்செல்வம் கல்வி
ஒருவருக்கு மாடல்ல மற்றையவை"
எனும் திருவள்ளுவரின் வாக்கிற்
கமைய வாழ்ந்து வழிகாட்டி
மறைந்த உங்களது
பிறந்தநாளில்
ஆசிவேண்டி நிற்கும்
சி.க. திருமாறன் குடும்பம்
(மகன்)

215, அச்சுவேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## திருமதி ரதி ஜெயராசா

[ஓய்வுபெற்ற ஆசிரியை - யாழ் இந்துமகளிர் கல்லூரி, ஓய்வுபெற்ற உப அதிபர் - வண்ணை நாவலர் வித்தியாலயம்]



பிறப்பு 15.04.1953 இறப்பு 17.05.2020

யாழ். காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும், பிறவுண் வீதி, நீராவியடி பிரப்பங்குளம் வீதியை வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பில் வசித்த திருமதி ரதி ஜெயராசா கடந்த (17.05.2020) ஞாயிற்றுக் கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் (ரதிமில்) அன்னலஷ்மி தம்பதியினரின் மூத்த மகளும், ஜெயராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுந்தரராசா, சாயாதேவி தம்பதியினரின் அன்பு மருமகளும் வாணி (லண்டன்), சாரபி (கொழும்பு இராமநாதன் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவபாலனின் (லண்டன்) அன்பு மாமியாரும், தாட்சாயினி, கார்த்திகன் ஆகியோரின் அன்புப் பேர்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (18.05.2020) திங்கட்கிழமை கொழும்பு கல்கிசை இந்துமயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராசவீதி கோப்பாய் தெற்கு
தொலைபேசி இல:- 077 103 6413

தகவல்:-
இ.அருச்சுனன் (சகோதரன்)

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

## மீள் பெறுகை அறிவித்தல்

## 2020ஆம் ஆண்டுக்கான கனரக இயந்திர இயக்குநர் சேவைகளுக்கான விலைமனுக் கோரல்

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் 2020ஆம் ஆண்டுக்கான கனரக இயந்திர இயக்குநர் சேவையை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை | எதிர்பார்க்கப்படும் / தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| NP/14/41(15)/02/PC/04 | கனரக இயந்திர இயக்குநர் சேவை | 01 |

1) சேவை வழங்குநர்கள் கனரக இயந்திர இயக்குநர் சேவையை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்..
2) சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் ம்ாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
3) சேவை வழங்குநர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள தனித்தனி பெறுகை ஆவணங்களை வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 20.05.2020 தொடக்கம் 02.06.2020 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ.2500.00 ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
4) பெறுகை ஆவணங்கள் 03.06.2020 **ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு** முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு **"தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"**. என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
5) கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**க.தர்ஷன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்ப. 1988ஆம் ஆண்டு பிறந்த திருவாதிரை நட்சத்திரம். கிரகபாவம் 16 உடைய சிங்கப்பூரில் வேலை செய்யும் அழகிய மணமகனுக்கு மணமகள் தேவை.
**அரச உத்தியோகம் விரும்பத்தக்கது.**
தொடர்பிற்கு:- 0777 424 582

## வேலையாள் தேவை

சைவ உணவகம் ஒன்றுக்கு கீழ் குறிப்பிட்ட வேலையாள்கள் தேவை.
1. இடியப்பம் போடுபவர்
2. தேநீர் தயாரிப்பவர்

தகுதிக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.
தங்குமிட வசதி உண்டு.
தொடர்பு:077 322 5454

## நாகபூஷணி திருமணசேவை

மணமக்கள் அனைவருக்கும் பதிவுக் கட்டணங்கள் யாவும் இலவசம்.
**(20.05.2020, 21.05.2020)** நீங்கள் விரும்பும் மணமக்கள் யாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் பெற்றுக் கொள்ளலாம்.
**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
021 222 9306, 077 138 7596

ES Printers

மக் பிரிண்ட் (MUG)



# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472
கிளை அலுவலகம்:-
New Market, 1st Floor,
Chavakachcheri
021 492 7432
esprintersjaffna@gmail.com

லக்சுமி மணிமண்டபம்

- திருமண வைபவம்
- பூப்புனித நீராட்டு விழா
- பிறந்த நாள் விழா
- விசேட ஒன்று கூடல் நிகழ்வுகள்

போன்ற நிகழ்வுகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்
லக்சுமி மணி மண்டபம்
தொடர்பு: இ.அன்னலக்சுமி
விளையாட்டு அரங்கு வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
அன்னலக்சுமி - 077 125 7796
பரமேஸ்வரன் - 077 498 0360
சுமன் - 077 010 9368
முரளி - 077 426 6486

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் அழகம்மா



மில்லேன், ஏழாலை மேற்கு ஏழாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அழகம்மா நேற்று (19.05.2020) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு முத்துப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், விமலாதேவி, சுசிலாதேவி, தவராசா, ரஜனிதேவி, சபேசராஜா, தர்மராஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும், அ.சிவஞான சுந்தரம், இ.சிவஞானசுந்தரம், விமலகாந்தன், ரஞ்சினி, சியாமளா தேவி, சதீஸ்குமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவகரன், அகிலாவதி, கிருபாகரன், பகீரதி காலஞ்சென்றவர்களான சிவரூபி, சிவரூபன் மற்றும் சிவரஞ்சித், சிவரதீபன், பிரவீணா, தனுசன், தட்சாயினி, காலஞ்சென்ற சியாமளா மற்றும் ஜெயரதன், காந்தசீலன், தயாரூபி, சந்திரசேகரன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சுவர்ணன், துளசி, புவிதா மற்றும் ஜெனிஷியா, கனிஷ்டன், அபிநிஷா, ஜனகன், கேமிஷா, வருணன், வாகீஷா, கௌசிகா, டிலக்ஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2020) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மில்லேன், ஏழாலை மேற்கு,
ஏழாலை.

தகவல்: குடும்பத்தினர்
076 755 0513, 076 920 5463



# ரயர்கள் எரித்தனரென மண்டானில் 4 பேர் கைது

யாழ்ப்பாணம், மே 20
வடமராட்சி மண்டானில் நேற்று ரயர்களுக்கு தீ வைத்து எரித்ததால் எழுந்த கரும்புகை காரணமாக அங்கு குழப்பம் ஏற்பட்டது. தீ வைத்தனரென்ற குற்றச்சாட்டில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
கரவெட்டி பிரதேச ஆளுகைக்கு உட்பட்ட மண்டானில் ரயர்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. அதனால் துர்நாற்றம் எழுந்ததோடு, வானத்தில் கரும்புகை மண்டலமாகக் காட்சியளித்தது.
இது பற்றி அதற்கு அருகிலுள்ளவர்கள் கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர் த.ஐங்கரனுக்குத் தகவல் வழங்கினர்.
பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சகிதம் அவர் சென்று பார்த்தபோது நால்வர் ரயர்களை எரித்துக்கொண்டிருந்தமை தெரியவந்தது.
அவர்கள் பற்றி பொலிஸாருக்க அறிவிக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் சாவகச்சேரியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-26)



# மங்கள மீண்டும் சி.ஐ.டியில்



கொழும்பு, மே 20
முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர வாக்குமூலத்தை வழங்குவதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் மீண்டும் நேற்று முன்னிலையாகியுள்ளார். 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது வாக்காளர்களை அழைத்து வருவதற்காக இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகளை பயன்படுத்திய சம்பவம் தொடர்பாக வாக்குமூலத்தை வழங்குவதற்காகவே அவர் இவ்வாறு முன்னிலையாகியுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைக்காக இந்த மாதம் 14 ஆம் திகதியும் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர வாக்குமூலத்தை வழங்குவதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## வான்கதவுகள் மூன்று திறப்பு

ஹற்றன்,மே 20
மலைநாட்டில் பெய்துவரும் அடைமழையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்து வருகின்றது. இதனால் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் ஒரு வான்கதவு திறக்கப்பட்ட நிலையில் நீர்மட்டம் அதிகரித்ததால், நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு மேலும் இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்டன. மேல் கொத்மலை அணைக்கட்டுக்கு கீழ் ஆற்றுப்பகுதியைப் பயன்படுத்துபவர்கள் விழிப்புடன் இருக்குமாறு கோரப்பட்டுள்ளது. (க)


## 100வது பிறந்தநாள் நினைவு
## 100th Birthday Remembrance

தோற்றம் 20 . 05 . 1920



மறைவு 16 . 12 . 2006

அமரர்
## சின்னப்பு கனகசபாபதி

**பகைஅகத்துச் சாவார் எளியர்: அரியர்**
**அவைஅகத்து அஞ்சா தவர்**

பகைவர் உள்ள போர்க்களத்திற்குத் துணிவோடு சென்று போரிட்டுச் சாக அஞ்சாதவர் பலர். ஆனால் கற்றவர் நிறைந்துள்ள சபைக்குச் சென்று அஞ்சாமல் பேசத் துணிவு கொள்பவர் ஒரு சிலரே,

அன்புடன் நினைவு கூரும்
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்



# மரண அறிவித்தல்



பிறப்பு : 22.12.1942 இறப்பு : 19.05.2020

## சின்னத்துரை யோகநாதன் (தவம்)

**(முத்திரைச்சந்தி அரைக்கும் ஆலை முன்னாள் உரிமையாளர், தற்போது ஶ்ரீவிநாயகர் அரைக்கும் ஆலை - முதலாளி, ஐந்து சந்தி)**

நல்லூர் மூத்த விநாயகர் கோவிலடியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கலைப்புலவர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை யோகநாதன் நேற்று (19.05.2020) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புக் கணவரும், நந்தினி (இலங்கை), சுபாஜினி (ஜேர்மனி), கஜேந்திரன் (லண்டன்), சுதாகர் (பிரான்ஸ்), மேனகா (இலங்கை) ஆகியோரின் அன்பு தகப்பனாரும், காலஞ்சென்ற சுரேஸ்குமார் (இலங்கை), ரவிக்குமார் (ஜேர்மனி), கார்த்திகா (லண்டன்), யயந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தருஷன், சுபராஜ், கீர்த்தனா, ரகின், ரகிதா, ரபின், வேதிகா, வருணிகா ஆகியோரின் அன்புப் பேரனும், கனகரத்தினம் மகா வித்தியாலயத்தை பிறப்பிடமாகவும், நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினத்தின் தம்பியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2020) புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.19, கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 633 7758

# ஒபாமா முற்றிலும் திறமை அற்றவர்!

## ட்ரம்ப் விளாசல்

வொஷிங்டன், மே 20

கொரோனா வைரஸ் பரவலை ட்ரம்ப் அரசு கையாளும்விதம் குறித்து கடந்த சனிக்கிழமை அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா விமர்சித்திருந்தார்.



இந்த நிலையில் ஒபாமாவை முற்றிலும் திறமையற்ற அதிபர் என்று ட்ரம்ப் பதிலடி கொடுத்துள்ளார்.

இதுகுறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்ததாவது: ஒபாமா திறமையற்ற அதிபர். முற்றிலும் திறமையற்ற அதிபர். அவரைப் பற்றி அவ்வளவு தான் சொல்ல இருக்கிறது'- என்றார். (ம)

**தேவை**

யாழ். கைத்தொலைபேசி நிலையத்திற்கு விற்பனையாளர், திருத்துனர், பழக விரும்புவோர் தேவை. சம்பளம் 25,000-30,000. வயது 18-25

தொடர்புக்கு: 077 1996 117

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

சகல நாடுகளுக்குமான பொதிகள் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


திருமுருகன் கொம் நெற் (Pvt)Ltd
321, K.K.S. Road, Jaffna மற்றும் கிளைகள்
0777 554 528

# கொரோனா தொடர்பில் சர்வதேச விசாரணை!

## 102 நாடுகளின் கோரிக்கையை ஏற்றது உலக சுகாதார அமைப்பு

**வொஷிங்டன், மே 20**

**கொரோனா வைரஸ் உருவான விதம், அது பரவிய விதம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்துவதற்கு உலக சுகாதார அமைப்பு இணங்கியுள்ளது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளின் அழுத்தத்தை அடுத்தே உலக சுகாதார அமைப்பு இந்த முடிவுக்கு உடன்பட்டுள்ளது.**




கடந்த ஆண்டு டிசம்பரில் சீனாவின் வுகான் நகரில் உருவான கொரோனா வைரஸ் தொற்றால் உலகம் முழுவதும் இதுவரை 48 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். 3 லட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். சீன அரசின் வைரஸ் ஆய்வகத்தில் இருந்துதான் கொரோனா வைரஸ் பரவியது என்று அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் குற்றம்சாட்டி வருகின்றன. கொரோனா வைரஸ், ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட கிருமி என்று இந்திய அமைச்சர் நிதின் கட் கரியும் உறுதிபட தெரிவித்துள்ளார். ஆனால் அதை சீனா மறுத்து வருகிறது. இதுதொடர்பாக சர்வதேச நிபுணர்கள் குழு சீனாவுக்கு நேரில் சென்று விசாரணை நடத்த வேண்டும் என்று அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால், சர்வதேச நிபுணர் குழுவை அனுமதிக்க மாட்டோம் என்று சீனா வாதிட்டு வருகிறது.

உலக சுகாதார அமைப்பின் தற்போதைய தலைவர் டெட்ராஸ் அதானான் கேப்ரியாசஸ், சீனாவுக்கு ஆதரவாக செயல்படுகிறார், கொரோனா வைரஸ் குறித்த உண்மைகளை சீனாவோடு சேர்ந்து உலக சுகாதார அமைப்பும் மறைத்துவிட்டது என்று அமெரிக்கா குற்றம்சாட்டி வருகிறது.

இந்நிலையில், உலக சுகாதார அமைப்பின் கொள்கைகளை வகுக்கும் பிரிவான உலக சுகாதார சபையின் 2 நாள் மாநாடு, ஜெனிவாவில் நேற்று முன்தினம் தொடங்கியது. முதல்முறையாக இந்த மாநாடு காணொலி காட்சி மூலம் நடந்தது. இந்த மாநாட்டுக்கு முன்னதாக உலக சுகாதார அமைப்பிடம் ஐரோப்பிய யூனியன் சார்பில் தீர்மானம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

அதில் கொரோனா வைரஸ் எங்கு தோன்றியது, உலகம் முழுவதும் மக்களிடம் வைரஸ் பரவ யார் காரணம் என்று விசாரணை நடத்த வேண்டும். இதுதொடர்பாக உலக சுகாதார அமைப்பு எடுத்த நடவடிக்கைகள் என்ன என்று விளக்க வேண்டும் என தீர்மானத்தில் வலியுறுத்தப் பட்டுள்ளது. இந்த கோரிக்கைக்கு இந்தியா, அமெரிக்கா உட்பட 120க்கும் மேற்பட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. இதையடுத்து சர்வதேச விசாரணைக்கு உடன்பட்டுள்ளது உலக சுகாதர்ர அமைப்பு.

உலக சுகாதார அமைப்பின் மாநாட்டில் அதன் தலைவர் டெட்ராஸ் அதானன் தெரிவித்ததாவது: உலக நாடுகளின் கோரிக்கையின்படி மிகவும் விரைவாக, உரிய நேரத்தில் முழுமையான விசாரணை வெளிப்படைத்தன்மையுடன் நடத்தப்படும் என்பதை உறுதிசெய்கிறேன். அதுவரை எந்தநாடும் உலக சுகாதாரஅமைப்புக்கு வழங்கும் நிதியை நிறுத்த வேண்டாம்.

கொரோனா வைரஸ் மீண்டும் வராமல் பார்த்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை உலக நாடுகள் உறுதி செய்ய வேண்டும். உலகிற்கு மற்றொரு திட்டம் அவசியமில்லை, மற்றொரு செயல்முறை அவசியமில்லை, மற்றொரு குழுவோ, அமைப்போ தேவையில்லை.

உலக சுகாதார அமைப்பை வலிமைப்படுத்துவோம், அதன் நிதிவசதி, அமைப்பு முறை ஆகியவற்றை வலுப்படுத்துவோம். வெளிப்படைத்தன்மையுடன், சுதந்திரமான விசாரணை நடத்தப்பட்டு எதிர்காலத்தில் இதுபோன்ற பெருந்தொற்று நோய்கள் வராமல் தடுக்கவும், வந்தால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகளையும் வழங்குவோம்' எனத் தெரிவித்தார் . (ம)

**மரண அறிவித்தல்**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 29 . 04 . 1991 | 19 . 05 . 2020 |



**இராசு தீபன்**

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசு தீபன் நேற்று (19.05.2020) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசு, இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தர்மகுலசிங்கம், மங்கயர்க்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும், கௌசிகாவின் அன்புக் கணவரும், பிரித்வியின் பாசமிகு தந்தையும், விபுலன்-வாசுகி, பவுயன்-கேசிகா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2020) புதன் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.T.M ஓயில் மில்
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.

தகவல்: குடும்பத்தினர்.

# நேபாளத்தில் தொடர்கிறது ஊரடங்கு!



காத்மண்டு, மே 20

நேபாளத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருவதால், இன்றுடன் முடிவடைய இருந்த ஊரடங்கை அடுத்த மாதம் 2ஆம் திகதி வரை அந்தநாட்டு அரசு நீடித்துள் ளது.

இந்தியாவின் அண்டை நாடான நேபாளத் தில் நேற்று முன்தினம் புதிதாக 9 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியானது. இதனால் அங்கு இந்த வைரசால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 304ஆக அதிகரித்துள்ளது. அதையடுத்தே ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. (ம)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.